REGISTERED No. M. 6165. அணா 2

83

பத்ஹுல் இஸ்லாம்

FATHHUL-ISLAM

8 JAN 1954

மாத பத்திரிகை

ஜனவரி 1954.

விஷயம்.	பக்கம்.
இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாத இன்றைய தேவை (வேளாங்கண்ணி-சாந்திதாஸன்)	1
நானில ஜோதி நபிகள் பிரான் (விடத்தல் தீவு எம். பி. எம். முஹம்மது காஸீம்)	4
இஸ்லாமும் வாலிபமும் (எம். எஸ். முஹம்மது அலி: அலங்கியம்)	5
பலிக்கு பலி (எஸ். எஸ். அலாவுத்தீன்)	7
ஹஸரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் (அய்யம்பேட்டை எஸ். அப்துர் ரஜாக் ஸாஹிப்)	15
மாயமாய் மறைந்த மங்கை (தொடர் கதை)	21
...ம் மனிதனும் ... எஸ். அஹ்மத் மீரா)	31

...ஸ்லாம் ஆபீஸ் :
20, ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

SL
N54
187626

பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1-8-0
தனிப் பிரதி	அணா.	2
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2-0-0

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

டர்க்கி பால்கன் யுத்த சரித்திரம்.

இதில் ஐரோப்பா கண்டத்திலுள்ள புராதன இராஜ்ஜியமாகிய டர்க்கிக்கும், பால்கன், ஸர்வியா, மாண்டி நீக்ரோ, யூனன் (கிரீக்) முதலிய இராஜ்ஜியங்களுக்கும், உலக முதலாவது யுத்தத்திற்கு முன்பு, நடந்துவந்த அற்புதமாகிய சண்டைகளைப் பற்றி மிக விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூ. 2

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்.

ஜனவரி—1954.

8 JAN 1954
MADRAS

இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாத இன்றைய தேவை?

[வேளாங்கண்ணி—கவிஞர் சாந்திதாஸன்]

எண்ணற்ற மாந்தர் மரபினர்கட்கு நன்னெறியினை நவின்றுள்ள ஒரு மதம்! மண்டை ஓடுகளை தமது காத்திலே ஏந்தி அவற்றிலே மதுவை ஊற்றி மாந்திய குண்டர் குழுவினர்கட்கு கண்டணம் விடுத்த ஒரு மதம்! சாதாரண ஒரு பொருள் மாற்றுகள் போன்று பழக்க வழக்கத்திலே பொருமையிழந்த பூவைகட்கு பூரணவாழ்க்கையளித்த ஒரு மதம்! இன்றைய ஜனநாயகம் என்னும் அரசியில் விவேகத்திற்கு அன்றே அலாதியானதொரு மணிமணியான திட்டம் தீட்டி தந்துள்ள **ஒரு மதம்!**

கேவலம், கற்பாறைகட்கும் நெற்குவியல்கட்கும் நிகழ்த்தப் பெற்ற வணக்கங்களை ஒரு சொல்லுக்கே சுதந்திரமாக்கிய ஒரு மதம்! சுமார் இருபத்திஐந்து ஆண்டுகளிலே முளைத்து இந்த கணமும் எத்திசை நோக்கினும் பூத்துக் குலுங்கும் ஒரு மதம்! ஆங்கில அறிஞர்களான ஜார்ஜ் பெர்னுட்ஷா, டாக்டர் கார்லைல், ஸர்ஹென்றி போர்ட், டேவிட்லிவிங்க்ஸ்டன், கொலம்பஸ், முதலிய பலரின் அதர, அசைவின் ஆழிய நன்றி காணிக்கைகளை அன்று ஒருவமயத்திலே தனது அணிகளாகப் பூண்டுக் கொண்ட ஒரு மதம்! வடபகுதியைச் சார்ந்தவர கவிஞர்களான கவிஹாலி, கவிநஸ்ருல் இஸ்லாம், கவிலத்தீப், கவி உமர்கையாம், கவி இக்பால் முதலிய பலரின் காவியப்படைப்பிலே ஒரு கந்தர்வக்கோட்டையாக காட்சியளித்த ஒரு மதம்!

இன்றைய அரசியல் உலகத்தின் அசகாய சூரர்களான முஹம்மது அலிஜின்னு, மௌலானு அலி சகோதர்கள், ஸர் செய்யித் அஹமது

கான், பஜ்லுல் ஹுஸைன் லியாகத் அலிகான், காந்திஜீ, நேரு ஜீ, ராஜாஜி, ராஜேந்திர பிரஸாத். டாக்டர் சரோஜினி தேவி நாயுடு முதலிய பலரின் மதிப்புரைகட்கு ஒரு மகுடமாக மிளிர்ந்த ஒரு மதம்! இந்த யுகத்திலே மதியாளர்களின் மலர்ந்த வாழ்க்கை தரத்தின் நடுவிலே இருக்கிற தெனின், அது இஸ்லாமென்னும் ஈடில்லாத அந்த ஓரே சகாப்தம் தான் என்று உறம் பாய்ந்த உள்ளத்தினூடே உரைக்கத்தயங்க மாட்டேன். அத்தகைய அரிய ஆத்மார்ந்த சக்தி படைத்த மதமாகிய இஸ்லாம் இன்று எந்த நிலையிலே இருக்கின்றது என்பதை பெயர் தாங்கிகள் பிரதியட்சமாக கண்நோக்க முற்படவேண்டும். ஒருமுறையல்ல, பன்முறைதான் அணுகி ஆராய்ந்து பார்க்குமாறு இங்கு அறை கூவல் ஒன்றை விடுகின்றேன். ஆம்! பிணக்குவியல்களிலே இனம் இன்னதென்றறியாது படுத்திருந்ததையும், அறுதியிட்ட ஒரு சிறு சுயநலத்திற்காக குருதியைக் குடித்ததையும், பிறமாதருடன் புணர்ச்சி செய்தவற்றை ஒருபெரும் பாக்களாக சுவர்களிலே பொறித்து ப்டி மகிழ்ந்ததையும், முதியோரை விதிவச மென்றெண்ணி புதியதொரு சமாதிகட்டி முடித்ததையும், பெண்குழவி பிறந்தால் தனது உன்னத நடத்திற்கே ஊறுவிளையு மென்ற மாய்மலப் பிடியிலே குரல்வளையை நெறித்து குன்றுகளிலே வீசி எறிந்ததையும் தான் சற்றுகண்ணெதிரில் நிறுவி பார்த்து விடுமாறு சவால் விடுகின்றேன். சென்ற வாழ்க்கையைப்பற்றி சிந்திப்பதற்கு எங்களுக்கு அவகாசம் ஏது? ஏன் இவ்வாறெல்லாம் தாறுமாறாகத் தாக்கி சமுதாயத்தின் உள்ளூற ஒளிந்துள்ள வண்டவாளங்களை எல்லாம் தண்டவாளத்திலே ஏற்றுகின்றாய் என்று கேட்கின்றீர்களா? இல்லை, இல்லை அவ்வாறு இங்கு தாக்குவதும் எமது நோக்கமல்ல.

அன்று அறியாமையின் சிகரத்திலே அவர்களெல்லாம் அமர்ந்திருந்தார்கள். இன்று அலட்சியத்தின் பாரத்திலே நீங்கள் ஆழ்ந்து கிடக்கின்றீர்கள் என்ற இவ்விரு வித்தியாசத்தைதான் அடிப்படை ஆதாரம் காட்டி வெளிப்படுத்துகின்றேன்.

இஸ்லாம் என்னும் எழிலுறும் வார்த்தை வரிசைகளை—இத்தனை மேதைகளால் முடிவுரை வழங்கப்பெற்ற பிரளய சகாப்தத்தை ஒரு "இடுகுறி"ப் பெயராக அப்புறப்படுத்த இன்று கங்கணம் கட்டுகின்ற ஆலகால விஷப்பேய்களின் கோரப்பிடியிலே அவற்றின் வாய்களின் அருகிலே—சோதனையின் நெருக்கடியான கட்டத்திலே இதே பெயர் மிகமிக அண்மித்துக் கொண்டிருப்பதை இன்றைக்கு அறியாதார் எவரேனும் இருக்க முடியாது. இந்த அபாயத்தினை தடுக்க! தன் மானத்தை வளர்க்க! உண்மை நிலைக்க! புன்மைகளை பொசுக்க! வீரத்தை விடாது நாட்ட, கோரமுடிவை தந்தும் ஒட்ட குறுக்குவழி என்ன? கொஞ்சம் பொருங்கள் கூறிவிடுகின்றேன்.

187026

ஒரு அணங்கையின் ஆட்டக் கச்சேரி எனின் ஆயிரக்கணக்கில் அள்ளி வீசும் ஆகிரிதிகளும், "பஞ்சாவினோதத்திற்கு" வெஞ்சாமறை வீசுகின்ற இன்றைய பொருள்படைத்த பிரமுகர்களும் தங்களது இல்லங்களிலே—வேண்டுமென்றே வீண்விருந்தோம்பி அங்கமுழுதும் புளகாங்கித முற்று, ஆடம்பரங்களைப் பாடலீபுரம் வரையில் எட்டச் செய்யும் பிரபுத்துவ பெருந்தகையாளர்களும் முற்றும் உய்துணர்ந்து முதன்மையானத் திட்டமாக கற்றறிந்த எத்தனையோ எழுச்சியுள்ளம் பூண்ட இளங்காளைகளை ஆங்காங்கு பயன்படுத்தி, பொருளுதவி ஈந்து பல தேசங்கள் தோறும் இயன்ற அளவிற்கு இஸ்லாமியப் பிரச்சாரத்தில் இறங்கச் செய்யத் துணியவேண்டும். இவற்றை நேரியமுறையிலே போதிய உதாரணத்தினூடே நிரூபித்துக் காட்ட, இன்று அவர்களால் முடியுமென்பதே எமது அசைக்க முடியாத உறுதி. பெரியோர்களும் தங்களது பெருந்தன்மையை மூட்டைக்கட்டி ஒரு மூலையிலே போட்டு வைத்துவிட்டு, இன்றைக்கு சுமார் முப்பத்திஐந்து ஆண்டுகளாக வடபதி ஈடாக, தென்நாட்டிலே மக்களின் இதய ஏட்டிலே, சிந்தனையைக்கிளறி இன்று மன்னார் குடியிலே! நாளை திண்டுக்கல்லிலே! மறுநாள் மஞ்சக்கொல்லையிலே! இவ்வாராக சுற்றுப்பிரயாணம் செய்து வரும் "தப்லீக் ஜமாஅத்" குழுவினருடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க பங்குபெற வேண்டும். யானும் அக்குழுவிலே, பிரச்சாரப்பணியின் வாயிலாக பங்கு பெற்றுள்ளேன் என்பதையும், இன்றும் அதில் ஆக்க அலுவல் ஏற்கும் ஒரு பால்யன் என்பதையும் அறிவிக்க ஆசைப் படுகின்றேன். இவைதான் இன்றைக்கு இஸ்லாமியத் தேவைக்கு இன்றியமையாத முக்கியத்தேவையாகும். உதட்டளவிலே ஒழுக்கம் இருப்பதில் ஒரு பயனுமில்லை.

ஆண்டுகள் தோறும் கூண்டெழுப்பி தாண்டிக்குதிக்கும் தன்மையை விடுத்து உடனடியாக உறுதிப் பிரமானம் ஏற்று இப்பணிக்கு முற்படுங்கள்.

திருக்குர்ஆனிலே "எர்ஜுக்கு ஹூமன்யஷாவு பிகைரிஹிசாப்" அதாவது, நற்கருமத்தில் நாட்டமுறுபவனுக்கு, அவன் எதிர்ப்பாரா வகையிலே குபேரசம்பத்தை வழங்குவோம் என்னும் இறையின் கூற்றை இங்கு சிந்திக்க விழைகின்றேன்.

நானில ஜோதி நபிகள் பிரான்

(விடத்தல் தீவு M. P. M. முஹம்மது காஸீம்)

வானவெளியினிலே தாரகை வந்து ஒளிர்வதுபோல்
தானயிறையருளால் நபிகள் தாயகம் வந்துதித்தார். (1)

அந்தகாரம் அனுச்சாரம் ஸிர்க்ஆகாதபித்ஹறத்துடன்
வந்தவழி தொலைய இஸ்லாம் வளர்த்த நபியுதித்தார் (2)

சூதுவாது கொலைகள் விபசாரசூழல் மதுக்குடியும்
பாது முன்பனி யெனவே ஓடபாரில் நபிபிறந்தார் (3)

மக்கள் மரங்கல்லுகளைத்தினம் மன்றுடும் பேய்க்குணத்தை
ஹக்களவில் திருப்பும் வணக்க கருணை நபிபிறந்தார் (4)

மாதர்உரிமையுடன் மக்கள் மனுநெறிச்சாகஸமும்
பாதம்படா நபியால் புவிபரவ நபிபிறந்தார் (5)

காமங்களவு விட்டு மக்கள் கல்விக்கலைஞர்களாய்
நாமம்புவிபுகழச் செய்ததீன் நபிகள் பிரான் பிறந்தார் (6)

சாந்தம் சமத்துவமும் அன்பு சர்க்கரை போலினிக்க
பாந்த மொழிபுகன்று நபிகள் பாரினில் வந்துதித்தார் (7)

கம்யூனிஸ ஸோஷலிசம் பலவிஷயம் காணுததத்துவத்தை
நம்யூனிஷம் விளைத்த இஸ்லாம் நபிகள் பிரான் பிறந்தார் (8)

நானில ஜோதி யென நபிகள் நாதர் பிரான் பிறந்த
மானிலபாக்கியத்தை மக்கள் மறக்காமல் போற்றிடுமின் (9)

மீண்டும் நினைவூட்டுகிறோம்! குறைந்த ஊதியத்தில்
சிறந்த கலை இலக்கியப் பணிகட்கு
புதுமையானப் போக்கிலே! புதிரான நடையிலே!!
புரட்சித் தென்றலிலே!!!

கவிஞர், சாந்திதாஸன்
“ கலா நிலையம் ”
வேளாங்கண்ணி P. O.

இஸ்லாமும் வாலிபமும்

(எம். எஸ். முஹம்மது அலி: அலங்கியம்)

அருளாளனும் அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருநாமத்தால் உதயம்.

இறைவனே இவ்வுலகத்தின் சிருஷ்டிகர்த்தா; அவனையே நாம் வணங்க வேண்டும். அவனை யன்றி மற்றெவரையும் வணங்கக் கூடாது. அவனுக்கு இணை துணையில்லை. ஒப்புவமையுமில்லை. நன்மையோ, தீமையோ நாம் செய்யும் வினைக்குத் தக்க பலனை அவன் நமக்கு அளித்தே தீருவான். நம் வினைக்குத் தக்க பலனை நாம் அடையும் நாளையே இறுதி நாளென்றும் விசாரணை கால மென்றும் கூறப்படுகிறது, என்ற இவ்விஷயத்தை ஒவ்வொருவரும் ஒரு சிறிதும் சந்தேகமின்றி உறுதியாக நம்ப வேண்டும். அல்லாஹ் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தை அளித்து மக்கள் பக்கம் அனுப்பி வைத்தான். அவர்கள் நமக்கு போதனை புரிந்திருக்கிறார்கள். அவர்கள் நமக்கு கற்பித்த போதனைப்படி அறிந்து, அமல்புறிவோமானல் இறைவன் பேரில் சத்தியமாக மறுமையின் (ஆகிரத்தின்) சகல பதவிகளையும் நிச்சயமாக அடைவோம்.

சகோதரர்களே! சகோதரிகளே! (மர்ஹூம்) மௌலானா ஷௌகத் அலி கூறுகிறார்:—

எனது சோதரீர் !

பரிசுத்த இஸ்லாத்தில் பிறந்த நீங்கள் நமது மார்க்கக் கட்டளைகளின் மீது உறுதியாக நிலைபட்டிருப்பீர்களானல், உலக வாழ்க்கை உங்கள் பக்கம் ஓடி வந்து சேரும். நான் பொய் சொல்லக்கூடும், மற்ற மனிதர்கள் பொய் சொல்லக்கூடும். உலகமும் பொய் சொல்லக்கூடும். ஆனல், அல்லாஹ் பொய் சொல்ல மாட்டான் என்பது நிச்சயம். “உங்களை ஜனங்களின் நன்மைக்காகவும். பிரயோஜனத்திற்காகவும் படைத்திருக்கிறேன்” என அவன் கூறியுள்ளான். ஆகையால் நீங்கள் ஈமானுடையவர்களாக, தெய்வ நம்பிக்கை யுடையவர்களாக இருத்தல் வேண்டும்......என்ருர்.

சீமான்களே ! சீமாட்டிகளே ! சிந்தித்துப் பார்த்து சீர்திருத்திக் கொள்ளுங்கள். இப்பொழுது நாம் இஸ்லாத்தின் தத்துவத்தின் பக்கம் முன்னேக்கி அதற்கேற்ப நமது செயல்களைப் பரிசுத்தப் படுத்திக் கொள்ள வேண்டுமானல் எனது இஸ்லாமிய வாலிபர்கள் நாஸ்திகம் தலைவிரித்தாடும் இந்த காலத்தில், ஆஸ்திகத்தை அகிலத்துக்கு எடுத்துக் காட்ட வேண்டுமானல், பொடுபோக்காக இருத்

தல் கூடாது. ஏனென்ருல், மனிதனுக்கு வயதை பொறுத்த வகையில் வாலிபமும், வயோதிகமும் முக்கியமானவை. வாலிப பருவத்தில் மனிதனது சக்தி, பலம், ஊக்கம், உற்சாகம், உழைப்பு, உணர்ச்சி, பயமின்மை, விடாமுயற்சி முதலியவை இருக்கும். வயோதிக பருவத்திலோ, மேற்கூறியவைகள் குன்றி, பலஹீன நிலை இருக்கும். சோம்பல், சக்தி யின்மை, ஊக்கமின்மை, பயம் கோழைத்தனம் முதலியவை இருக்கும். இவ்விரு நிலைகளில் என் நிலை பாக்கியமானது? என்பதையுணர்ந்து கொள்ளுங்கள். வாலிப நிலையே விசேஷமானது. மேலும், வாலிபமாக இருக்கும் சமயம் மனிதன் எந்த வேலையானுலுஞ் சரி நல்லபடி செய்ய முடியும். வயோதிக காலத்தில் செய்வதை பார்க்கிலும் வாலிப காலத்தில் செய்யும் வேலை திறமையாக இருக்கும். அதுமட்டுமல்ல. வாலிபமாக இருக்கும் போது ஒருவன் கெட்ட பழக்கத்தையோ அல்லது நல்ல பழக்கத்தையோ பழகி கொள்வானேயாகில், அப்பழக்கம் அவனது வயோதிக காலத்தில் அவனை விட்டு அது நீங்காது.

உதாரணமாக ஐந்தில் விளையாதது. ஐம்பதில் விளையுமா? இதே போல் ஒருவன் தனது இளம் வாலிப காலத்தில் தொழுகை, நோன்பும் வைக்கும் பழக்கம் இருந்தால், அப்பழக்கம் அவனது வயோதிக காலத்திலும் அவனை விட்டு நீங்குவது சிரமம். விட்டாலும் விலகாது இந்த வாலிப பழக்கம். இந்த மகத்தான பருவத்தில் மனதை மாறவிடாதீர்கள். வாலிப பருவத்தில் வணக்கம் புரிந்து கொண்டே வாழ்க்கை முறைகளில் ஈடுபடத்தான் மார்க்கம் கூறுகிறது. தவிற வணக்கம் புரிவதற்காக வாலிப பருவத்திலேயே உலக சம்பந்தம் எல்லாவற்றையும் சுருட்டிக் கட்டி எறிந்து விட்டு பள்ளி மூலையில் உட்கார்ந்து கொள்ளும் படி மார்க்கம் கூறவில்லை. சகோதரா-காற்று உள்ள போதே தூற்றிக் கொள், என்று தான் கூறுகிறது. கூறிக் கொண்டே இருக்கிறது. ஆகவே தான் நாம் வாலிப பருவமாக இருக்கும் போதே நம்மால் இயன்ற வரைக்கும் மார்க்கத்தையும் மார்க்க கட்டளையும் நமது பெருமானுர் திலகம் ரசூலேகரீம் (ஸல்) அவர்கள் நமக்கு போதித்துச் சென்ற சீரிய வாழ்க்கை நேரிய வழிகளை பின் பற்றி நடக்க வேண்டும். கெட்ட கருமங்களை கை விட்டு நல்ல அமல்களை எடுத்து நடத்துவதோடு.

வாலிப தோழர்களே!

நீங்கள் எழுந்து இஸ்லாமிய வரிசையை ஒழுங்கு படுத்துங்கள்; இஸ்லாமிய புனித தன்மையை உலகத்தார்களுக்கு காண்பியுங்கள், உங்களின் ஹிருதயத்தில் அமைந்துள்ள உண்மையின் உயரியதத்துவத்தை உலகத்திற்கே பரைசாற்றுங்கள். எட்டுதிக்கிட்கும் எடுத்து இயம்புங்கள். உணரட்டும். உணர்ந்து கொள்ளட்டும்.

வாழ்க இஸ்லாமியம்
வளர்க முஸ்லிம் உலகம்

"பலிக்குப் பலி"

அல்லது

" நீதிக்காகத் தமையனைக் கொன்ற தந்தை"

அல்லது

"பழி வாங்குதல்"

மூலம் : எ. எ. றஷீத்

(தமிழாக்கம்: எஸ். எஸ். அலாவுத்தீன் கோழிஞ்சாம்பாறை)

[சரித்திரப் புகழ் வாய்ந்தது ஜஹாங்கீர் சக்ரவர்த்தி நியாயம் வழங்கும் முறை—நீதியை நிலை நாட்டுவதற்காகத் தனது வாழ்க்கைக் காதலியையும் பலியிட முற்பட்டார் ஒரு தடவை—இதோ ! அவர் அன்புடன் நேசித்த வளர்ப்பு மகனை நீதிக்காக பலியிட்ட மற்றொரு சோகக் கதை.]

வங்காள கவர்னர் சைபுல்லா யானை மீது அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அமர்ந்திருக்கிறார். யானையைச் சுற்றிலும் பீதியடைந்த மக்கள் கூடியிருக்கிறார்கள். யானைப்பாகனின் விளறிய முகம் சைபுல்லா மீதும், கூட்டத்தினர் மீதும் மாறிமாறிப் பதிகிறது. பழிவாங்க வேண்டுமென்ற கூக்குரலோடு மக்கள் யானைப்பாகன் மீது பாய்ந்தார்கள். சூழ்நிலையை யறிந்த கவர்னர் கீழிறங்கினர். கூட்டத்தை விலக்கிக்கொண்டு ; யானையின் மிதியேற்று சிதறிப்போன ஒரு சிறுவனின் பிரேதத்திற்கருகே வேகமாக நடந்து சென்றார். அவரைக்கண்ட மக்கள் கூட்டம் முன்னினும் பன்மடங்கு ஆவேசம் வாய்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள். "பழி வாங்க வேண்டும்!" "பழி வாங்கவேண்டும்!" என்ற கூக்குரல்கள் ஒன்றோடொன்று மோதி எதிரொலித்தது.

"நான் எல்லாவற்றையும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டு தானிருந்தேன். யானையோ, பாகனோ குற்றவாளிகளல்ல. வேண்டுமென்றே வந்ததுபோல, யானையின் முன் வீழ்ந்து, அதன் மிதியேற்று மரித்த இச்சிறுவன் தான் குற்றவாளி. அதனால், இதற்குப் பழி வாங்க வேண்டுமென்று சொல்வது அநீதியானது. துக்கத்திலாழ்ந்திருக்கும் இச்சிறுவனின் பெற்றோர்கள் தேவைப்படும் பொருள்களைத் தர ஏற்பாடு செய்கிறேன்" சைபுல்லா அதிகாரத்தோரணையில் மக்கள் கூட்டத்தோடு பேசினர்.

"எனது குழந்தையின் மரணம் உங்களுடைய எந்த விதமான பரிசுகளுக்கும் ஈடாகாது. மரணத்திற்கு மரணம்! பலிக்கு பலி! அதுதான் எனது உள்ளத்திற்கு இன்பம் தரக்கூடியது. எனது மகன் எப்படியாக யானையின் மிதியேற்று மரித்தானே, அதேபோல இந்த யானைப் பாகனையும் யானையின் காலிலிட்டுக் கொல்ல வேண்டும். அது தான் நியாயம், அதைத்தான் நீதியென்று கருதவேண்டும்!"—ஒரு ஏழை வியாபாரியின் குரல் கவர்னரின் காதுகளில் முழங்கியது.

"அது முடியாத காரியம். இதுபோன்ற அநீதிக்கு இடங் கொடுத்து, மொகலாயப்பேரரசுக்குக் களங்கம் விளைவிக்க மாட்டேன்" என்று சைபுல்லா மீண்டும் கூறினார்.

இதைக்கேட்ட அந்த வியாபாரியின் வதனம் விடர்ந்தது. உக்கிர மான பார்வையுடன் அலறினன்: "எங்களுக்கு அநீதி செய்ய வேண் டாம். பலிக்கு ஈடாக பலி கிடைக்காத வரையில், இந்த விபரத்தை நெறிபிறழாத சக்ரவர்த்திக்கே அறிவிக்கநேரிடும்"

ஒரு ஏழை வியாபாரியிடமிருந்து வந்த இந்த ஆணவமான வார்த் தைகளைக்கேட்ட கவர்னர் கோபாவேசத்துடன், பற்களைக் கடித்துக் கொண்டு பேசத் தொடங்கினர்:

"எனது பதினைந்தாம் வயது முதல் நான் வங்காள கவர்னராக ஆட்சி செய்து வருகிறேன். நீங்களே கூறுங்கள்! எனது ஆட்சியில் இதுவரை நீதிக்குப் புறம்பாக ஏதாவது செய்திருக்கிறேனு என்று? உண்டென்று சொல்பவர்கள் தைரியத்துடன் முன்னே வரட்டும்!"

இந்த சவாலுக்கு பதில் சொல்ல எவரும் முன் வரவில்லை. அவர்க ளெல்லாம் மௌனத்தைக் கடைப்பிடித்தார்கள். சைபுல்லா மீண்டும் பேசினர் "ஒரு சாதாரண வியாபாரி என்னை பயப்படுத்துகிறுன். நான் நீதிக்குப் புறம்பாக நடந்தேனென்றும், விபரத்தை பாதுஷாவுக் குத் தெரியப்படுத்துவேனென்றும் இவன் கூறுகிறுன். இதற்கெல் லாம் நான் பயப்படுபவனல்ல. அவனது மனம்போன போக்கெல்லாம் அவன் செய்து கொள்ளட்டும்" இதை மட்டினும் கூறிக்கொண்டு யானை மீதேறி பல்லக்கில் அமர்ந்தார். மக்களின் பொருமை எல்லையை மீறிவிட்டது. யானைப்பாகனின் மேல் கற்கள் வீசப்பட்டது. நிலை மை கட்டுக்கடங்காததைக் கண்ட கவர்னர் தனது வேலையாட்களிடம் ஏதோ கட்டளை யிட்டார். அவர்கள் மக்கள் கூட்டத்தை நோக்கிப் பாய்ந்தார்கள். கொடூரமான புயலில், மரங்களிலிருந்தும் இலையுதிர்ந்து, நாலாபுறமும் சிதறியோடுவதுபோல, ஜனத்திரள் ஓடியது. கண்ணீ ரும் கம்பலையுமாக, துக்கமே உருவான அந்தத் தாய் தந்தையர்கள் மட் டிலும் அந்த பிரேத சரீரத்தினருகில் நின்று கொண்டிருந்தார்கள்.

சைபுல்லா மெல்லிய குரலில் பேசத் தொடங்கினர் " உங்களுக்கு எனது அனுதாபத்தைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். யானைப் பாகன் மீது எந்த விதமான குற்றமுமில்லை. அதனல் பரிசைப்பெற் றுக்கொள்க. என்னதான் உங்களது ஆசை ? "

" பழி வாங்குதல் "—அந்தத் தந்தை இடிமுழக்கம் செய்தான்.

கவர்னர் ஒன்றும் பேசவில்லை. யானை ஆடி ஆடி நடந்து மறைந்தது.

மறுதினம் காலை, மகனைப் பலி கொடுத்த பெற்ருேர்கள் நீதி மன் றத்திற்குக் கொண்டு வரப்பட்டார்கள். " உங்களது கடைசித் தீர் மானமென்ன ?" என்று கவர்னர் கேட்டார். " பழி வாங்குதல். பலிக்குப் பலி ! இது தான் எங்களது கடைசி முடிவு"—வியாபாரி பதில் கூறினன்.

"அது அநீதியானது. நீங்கள் தேவைப்படும் பரிசு கிடைக்கும், பெற்றுக் கொள்க. "

"நீங்கள் சரியான நீதி வழங்காதவரையில், எனக்கு பாதுஷாவை அடைக்கலம் புக நேரிடுமென மீண்டும் நினைவு படுத்துகிறேன். அவர் நியாயமான தீர்ப்பு வழங்குவாரென்ற நம்பிக்கை எனக்குண்டு".

இந்த ஏழை வியாபாரியின் ஆணவமான பேச்சைக் கேட்ட சபை யோர் கோபத்தால் துள்ளியெழுந்தனர். "இவர்களைச் சிறைபி லிடுங் கள்" என்ற சைபுல்லாவின் கட்டளை வெகு சீக்கிரத்தில் நிறைவேற்றப் பட்டது.

சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் அவர்கள் விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டார்கள்.

"இப்போது என்ன சொல்கிறீர்கள்" சைபுல்லா சாந்தமாகக் கேட்டார். அப்போதும் அந்த வியாபாரி யிடமிருந்து கிடைத்த பதில் "பழி வாங்குதல்! " என்ற அதே பழைய பல்லவிதான். சைபுல்லா வின் கோபம் எல்லையை மீறி விட்டது. அவர் கர்ஜித்தார். "இந்தக் கழுதைகளை சமூக பிரஷ்டம் செய்து, நாட்டிலிருந்தும் வெளியேற்றுக. இவர்களுக்காக அனுதாபப் படுபவர்கள் கடினமான தண்டனைக்கு உள் ளாவார்கள்".

நாட்கள் வாரங்களாகவும், வாரங்கள் மாதங்களாகவும் நீண்டு மறைந்தன. இவர்களை வெளியேற்றி ஆறுமாதக் காலமாகி விட்டது. இந்த வியாபாரியின் கதையை மெல்ல மெல்ல எல்லோரும் விமர்சனம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆனல் இந்த ஏழைப் பெற்ருேர் கள் இருக்குமிடம் மட்டினும் எவருக்கும் தெரியவில்லை.

வங்காள கவர்னர் சைபுல்லா மொகலாயப் பேரரசின் சக்ரவர்த்தினி நூர்ஜஹானின் தங்கை மகன். சிறு வயதிலிருந்தே லாகூரில் ஜிஹாங்கீர், நூர்ஜஹான் ஆகியோரின் அன்பிலும் ஆதரவிலும் வளர்ந்து வந்தான். பதினைந்தாவது வயதில் வங்காள கவர்னராக நியமிக்கப் பட்டான். இருபது வருட சைபுல்லா அட்சியில் ஒருசிறிய குற்றங் குறை யாவது சக்ரவர்த்தியால் கண்டுபிடிக்க முடியவில்லை. சைபுல்லா கொஞ்சங் கௌரவ முள்ளவனுக இருந்தாலும், அவனது ஆட்சியில் கீழ் மக்களெல்லாம் மகிழ்ச்சியுட னிருந்தார்கள்.

எதிர்பாராத விதமாக, ஒரு தினம் மகாராணியிடமிருந்து சைபுல்லாவுக்குக் கடிதம் வந்தது. ஆச்சரியத்துடன் கடிதத்தை பிரித்து வாசித்தார்.

“அன்பு மகனே! உனது ஆட்சியின் கீழிருக்கும் மாகாணத்திலிருந்து ஒரு வியாபாரியும், அவனது மனைவியும் நீதிக்காக நீதி மன்றத்தை அடைக்கலம் புகுந்திருக்கிறுர்கள். உன்னிடமிருந்து அவர்களுக்கு ஏற்பட்ட அநீதி என்னவென்பதை அறிய முடியவில்லை. நீதியை நிறைவேற்றுவதில் சக்ரவர்த்தி கடும் உள்ளம் வாய்ந்தவர். அதுவும், ஏழைகளானல் பிறகு கூறவேண்டியதே யில்லை. எனவே, சக்ரவர்த்தி இந்த விஷயத்தை அறியுமுன்பாக முழு விபரத்தையும் எனக்கு அறிவிப்பாயாக”

கடிதத்தை வாசித்ததும் சைபுல்லாவின் உடல் முழுதும் வேர்த்து ஒழுகியது. ஒரு குதிரைப்படை வீரனை மகாராணியிடம் அனுப்பினர்.

மகாராணி யிடமிருந்தும் பதில் கிடைத்து விட்டது. ஆனல் அந்த பதில் அவரை முன்னிலும் பன்மடங்காக பலஹீனமாக்கியது. “நான் எவ்வளவோ முயற்சி செய்து விட்டேன். விலையுயர்ந்த அநேக பரிசுகளும் கொடுத்தேன். ஆனல் அந்த வியாபாரியும் அவனது மனைவியும் எதையும் பெற்றுக் கொள்ள மறுத்து, கோட்டைக் கருகே, ராவி நதிக்கரையில் சக்ரவர்த்தியின் வரவுக்காகக் காத்திருக் கிறுர்கள். இனி என்ன செய்யவேண்டு மென்பதறியாது வேதனைப் படுகிறேன்”

மனோகரமான மாலை நேரம். கதிரவன் மேற்கே சென்று ஓய்வெடுத்துக் கொள்ளப் போகிறுன். மலர்களிலிருந்து நறுமணம் லேசாக வீசுகின்ற தென்றல் காற்றில் தவழ்ந்து, தவழ்ந்து வருகிறது. அதோ! அழகான ஒரு தோணி ஜஹாங்கீர் பாதுஷாவைச் சுமந்து கொண்டு கரையை நோக்கி பாய்ந்து வருகிறது.

“மகா ராஜாவே! நான் ஒரு ஏழை. வங்காளத்திலிருந்து நீதிக்காக வந்திருக்கிறேன்”.

தூரத்திலிருந்து, பலஹீனமான தொண்டையிலிருந்து வெளி வந்த அந்த வார்த்தைகள் காற்றுடன் இணைந்து, அலை வீசி பாதுஷா

வின் காதுகளில் ஒலித்தது. அழகான தோணியில், நறுமணம் வீசும் தென்றல் மேவ, உல்லாசப் பிரயாணம் செய்து கொண்டு, தன்னையே மறந்து, இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்த பாதுஷா திடீரென உணர்ந்தார்.

“நீதிக்காக ஜஹாங்கீரை எவராவது அழைத்தார்களா?” பாதுஷா சேவகர்களிடம் வினவினார்.

“ஷாஹின்ஷா! ஏதோ தரித்திரத் தம்பதிகள் இரு கரங்களையு மேந்தி கரையில் நின்று கத்துகிறார்கள்”

வேலையாட்களின் பதில் கேட்டவுடன், சப்தம் வந்த இடத்தை நோக்கி தோணி சென்றது. பாதுஷா தோணியிலிருந்து நிமிர்ந்து பார்த்தார். அன்பு மகனை பலி கொடுத்த அப் பெற்றோர்கள் சோகமே உருவாக நின்று கொண்டிருந்தார்கள்.

“உங்களுக் கேற்பட்ட அநீதி யென்ன?” வென்று சக்ரவர்த்தி கம்பீரமான குரலில் வினவினார்.

முதலிலிருந்து கடைசிவரை நடந்த விஷயங்களை யெல்லாம் தெளிவாக விளக்கினான் வியாபாரி. சக்ரவர்த்தியின் முகத்தில் கோபத் தீ படர்ந்தது.

முழுவிபரங்களையும் கூறிமுடிந்த பிறகு அந்த தம்பதிகள் சக்ரவர்த்தியின் காலில் வீழ்ந்து வணக்கம் செலுத்தினர். “நிச்சயமாக உங்களுக்கு நீதிகிடைக்கும்” பாதுஷா அவர்களுக்கு உறுதியளித்தார்.

அதைத் தொடர்ந்து சில பொன்னாபரணங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டது. தோணி மீண்டும் தண்ணீரைப் பிளந்து கொண்டு முன்னே சென்றது.

“வங்காளத்தம்பதிகளின் வழக்கை விசாரணை நடத்த வேண்டும். பர்துவான் கோட்டைக்குச் சென்று விசாரணை செய்து சைபுல்லாவை உடனே இங்கு கொண்டுவர வேண்டும்” அரண்மனையை அடைந்த சக்ரவர்த்தியின் முதல் உத்தரவு இது. சில முக்கிய அதிகாரிகள் வங்காளத்திற்குச் சென்றார்கள். சைபுல்லா இங்கு கொண்டு வரப்பட்டார். நாடெங்கும் பறந்து விட்டது இச்செய்தி! பாதுஷாவின் முடிவு என்னவாக விருக்கு மென்பதை அறிய மக்கள் துடித்தார்கள். வழக்கை விசாரணை செய்தார்கள். எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்த பாதுஷா சைபுல்லாவை நோக்கி, “இந்த விசாரணையில் கூறப்பட்ட தெல்லாம் உண்மை தானே?” எனக் கேட்டார்.

“ஆம்!” என்பதற்கு அறிகுறியாக சைபுல்லா தலையை அசைத்தார்.

"இந்த ஏழையின் விஷயத்தைக் கவனிப்பதற்கும், அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஜஹாங்கீர் நீதிவழங்குவதில் கடுகளவும் தாட்சண்ய மற்றவனென்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். அதனால், அதிகமொன்றும் கூறுவதற் கில்லை. நாம் மேலும் விசாரணை செய்வதில்லை."

ஜஹாங்கீரின் இந்த வார்த்தைகள் சைபுல்லாவின் புகழையும், கௌரவத்தையும் தாக்கியது. நீதி மன்றத்தில் அநேக அதிகாரிகளுக் கிடையில் தமக்கேற்பட்ட அவமானத்திற்காக அவர் கோபங் கொண் டார். வங்காளத்திற்குத் திரும்பிய பிறகு அந்த தம்பதிகளைத் தேடினார். அவர்கள் வங்காளத்திற்கு வந்தால், கைதிகளாக எண்ணி, சிறையிலிட்டு அடைக்கவேண்டுமென எல்லா போலீசு அதிகாரி களுக்கும் கட்டளையிட்டார். அதே போன்று அந்த தம்பதிகள் சிறை யிலடைக்கப்பட்டார்கள்.

மாதங்கள் பல நீண்டு சென்றது. ஒரு தினம் காவலி லிருந்த இந்த தம்பதிகளைக் காணவில்லை யென்ற செய்தி சைபுல்லாவை உலுக்கியது, பயப்படுத்தியது. எங்கெல்லாமோ தேடிப்பார்த்தும் அவர் களைப்பற்றிய ஒரு விபரமும் கிடைக்கவில்லை. எப்படியாவது அவர்கள் பாதுஷாவை அடைந்திருப்பார்களென சைபுல்லா எண்ணிக் கொண் டார். விஷயம் சக்ரவர்த்திக்குத் தெரியுமுன்பாக, அங்கு சென்று அவரிடம் மன்னிப்பு வாங்க வேண்டுமென எண்ணி தனது பரிவாரங் களுடன் அரண்மனைக்குப் புறப்பட்டார். ஆனால் சைபுல்லாவுக்கு முன்பாக அவரது தளபதி அங்கு சேர்ந்து விட்டார். சக்ரவர்த்தியைப் பேட்டிகாண வேண்டுமென்ற அவரது ஆசை நிராகரிக்கப்பட்டது. ஆனாலும் சிலதினங்கள் ஆடம்பரமான வரவேற்புகளும் விருந்துப சாரங்களும் கிடைத்தது. மீண்டும் சக்ரவர்த்தியைக் காணவேண்டு மென சைபுல்லா ஒரு தூதனை அனுப்பினார். பாதுஷா பதிலனுப் பினார்: "சைபுல்லாவை அரண்மனையிலோ! அன்றி ராஜ சபையிலோ சந்திப்பது முடியாத காரியம். ராஜ வீதியில் செல்லும் போது பார்க் கலாம்" என்று.

அன்று சக்ரவர்த்தி எழுந்தருளும் தினம். ராஜவீதி மலர்மாலை களால் ஜோடனை செய்யப்பட்டிருந்தது. வழியின் இரு ஓரங்களும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி நின்றனர். நவரத்தினங்களால் அலங் கரிக்கப்பட்ட பல்லக்கில் சக்ரவர்த்திக்குப் பதில் அந்த வியாபாரியைச் சுமந்து கொண்டும், அரண்மனை யானைப்பாகன் அதற்கு முன்பும், பின்னில் அலங்காரமற்ற சாதாரண யானை சக்ரவர்த்தியையும் சுமந்து கொண்டு நீங்கிக்கொண்டிருந்தது. மக்கள் அந்த விசித்திரகாட்சியைக் கண்டு ஆச்சரிய முற்றார்கள். சைபுல்லா, ஒன்றும் தெரியாதவனைப் போல திருதிருவென்று மக்கள் கூட்டத்தையும், சக்ரவர்த்தியையும்

மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருக்கும் போது, பாதுஷாவின் கம்பீர மான கட்டளை அவரது காதுகளில் அறைந்தது. "சைபுல்லாவின்கை, கால்களைக் கட்டி அரண்மனையானையின் கால்களுக்கடியிலிடுக".

சக்ரவர்த்தியின் இந்த முடிவைக் கேட்ட மக்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். என்ன செய்ய வேண்டுமென்பதறி யாது, சேவர்கள் கற்றூண்களைப் போல நின்றனர்கள். சக்ரவர்த்தியின் இந்தக் கட்டளையை நிறை வேற்ற எவரும் துணியவில்லை. "கட்டளை யை நிறைவேற்றுக" ஜஹாங்கிர் சிங்கத்தைப் போல கர்ஜனை செய்தார்.

வேறு வழிதெரியாத அரண்மனைச் சேவர்கள், நினைவற்று நின்றி ருந்த சைபுல்லாவைக் கட்டி, யானையின் முன்னிட்டனர். திடீரென தன்முன் வீழ்ந்த மகாராணி நூர்ஜஹானின் சகோதரி மகனைக்கண்ட அந்த மிருகம் இரண்டு மூன்றடி பின்னல் சென்றது. அதைக் கண்ட சக்ரவர்த்தி யானைப் பாகனிடம் கட்டளை யிட்டார்: "ஒன்று மறியாத அநத ஏழைத்தம்பதிகளின் குழந்தையை அந்த யானை எப்படி மிதித் ததோ! அதேபோல சைபுல்லாவும், அந்தக் குழந்தையின் பெற் றோர்கள் அமர்ந்திருக்கும் யானையின் மிதியேற்று மரிக்கவேண்டும். உயிருக்கு உயிர்! பலிக்குப் பலி! இதுதான் ஜஹாங்கிரின் நீதி".

சில நிமிடங்களில் அந்த கோரமான காட்சி முடிவடைந்தது. கூடியிருந்த மக்களின் உடல் தளர்ந்து போய் விட்டது. பயத்தால் வாய் விட்டு அலறியே விட்டார்கள்.

பாதுஷாவைச்சுமந்து கொண்டிருக்கும் யானை நின்றது. "சைபுல் லாவின் உடல் ராஜமரியாதையுடன் நகரம் முழுதும் சுற்றவேண்டும். இன்று முதல் மூன்று தினங்களுக்கு நாடெங்கும் துக்கதினங்களாக விருக்க வேண்டும்" என்று பாதுஷா கூறினர்.

மரண ஊர்வலத்தின் முன்பாக மொகலாய சாம்ராட்பாதாட்சை யின்றி நடந்து சென்றது. அளவற்ற வேதனை அவரது வதனத்தில் தேங்கி நின்றது. ஒழுகிக் கொண்டிருக்கும் கண்ணீருடன் அவர் தனது வாழ்க்கைத்துணைவி நூர்ஜஹானைக் கண்டார். வாய்விட் டலறிக்கொண்டு, நூர்ஜஹான் அவரை ஆலிங்கனம் செய்தாள். தொண்டை இடறிய வண்ணம் அவர் கூறினர்: "சைபுல்லாவை அன் புடன் எனது மகன் போலவளர்த்தேன். அவனிடம் எனக்கு அள வற்ற காதல் உண்டு. ஆனல், அந்த அன்பையும், எனது கடமை யையும், ஆண்டவன் எனக்குத்தந்த நீதியெனும் துலாசில் நிறுத்துப் பார்த்தபோது, கடமையிருந்த தட்டு அதிகமான கனத்தைக் காட் டியது. அதனல் என்னல் ஒன்றும் செய்யமுடியவில்லை. நீதியெனும் துலாசு என்னைத் தோல்வியுறச் செய்து விட்டது!" அவரிடமிருந்து வெளிப்பட்ட ஒரு சூடான சுவாசம், நூர்ஜஹானின் வதனத்தை மேலும் உஷ்ணப் படுத்தியது.

1954-வது
வருஷத்தின்

ஹமீதிய்யா முஸ்லிம்
காலண்டர்

வெளிவந்து விட்டது.

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டுவருவதால் சீக்கிரமாக செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்கு தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை அணா. 10
நூறு காலண்டர் விலை ரூ. 50

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ஹஸரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ்.

(அய்யம்பேட்டை S. அப்துர் ரஜாக் ஸாஹிப்)

ஹஸரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் உடைய மேன்மையும் சிறப்பையும் பற்றி கேள்விப் படாதார் மிகவும் சிலரே இருக்கக்கூடும்.

பிறப்பு

அவர்கள் கி. பி. 643-வது ஆண்டில் கெய்ரோவில் பிறந்தார். அவர் தந்தை அப்துல் அஜீஸ் எகிப்தின் பிரதம அதிகாரியாக இருந்து வந்தார். எனவே, அவர் ஆரம்ப காலமுதல் சுகமாயும் செல்வத்திலும் போஷிக்கப்பட்டு வந்தவர்கள்.

கல்விப்பயிற்சி

கி. பி. 651-ல் கல்விப் பயிற்சிக்காக வேண்டி அவர் திருமதீனுவுக்கு அனுப்பப்பட்டார். அங்கு திருக்குர்ஆனை மனப்பாட மாக்கினர். இமாம் அப்துல்லாபின் ஜாபர், அனஸ்பின் அப்துல் மலிக், இவர்களைக் கொண்டு ஹதீது பயிற்சியில் தேர்ச்சிப் பெற்றார். கி. பி. 659-ல் பயிற்சியடைந்த பின்னர் தம் சொந்த ஊருக்கே வந்துவிட்டார்.

ஹதீது சம்பந்தமான பிரசங்கத்திலும் இதர மதசம்பந்தமாயுள்ள விஷயங்களிலும் அவர் பெரியதோர் மேதாவியாக கருதப்பட்டு வந்தார்.

விவாகம்

கி. பி. 667-ல் அவருடைய தந்தை அல்லாமா அப்துல் அஜீஸ் காலமானார். அவரது மரணம் இவருக்கு பெரும் துயரத்தை உண்டு பண்ணியது.

சில நாட்களுக்குப்பின் எகிப்து வாசிகள் கலீபா அப்துல் மலிக் என்பவருக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் அனுப்பி வைத்தார்கள். அக்கடிதத்தில் உமர் இப்னு அப்துல் அஜீஸ் மதக்கல்வித் துறையில் பூரண பயிற்ச்சியடைந்து வந்திருப்பதாலும் அவர் தம் கல்வியறிவின்மூலம் பொது ஜனங்களுக்குமுன் உருக்கமான பிரசங்கங்களைச் செய்து அவர்களுக்கு நல்லறிவு புகட்ட தகுதி வாய்ந்திருப்பதாலும் அவரை எகிப்துக்கு கவர்னராக நியமனம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டது.

கலீபா அப்துல் மலிக், அவர்களின் விண்ணப்பக் கடிதத்தை படித்துப் பார்த்து அச்சமயம் சும்மா யிருந்துவிட்டார்.

ஆயினும், ஒருமாத காலத்திற்குப்பின் அவர் தம் சகோதரக் குமாரரான உமர் பின் அப்துல் அஜீஸை தம்மிடம் திமஷ்கிற்கு அழைத்து ஆடம்பரமற்ற ஏற்பாட்டின்கீழ் அவருக்கு தம் புதல்வியைக் கொடுத்துநிக்காஹ் செய்து வைத்தார்.

சுகவாழ்க்கை

கலியாண மானதும் உமர் இப்னு அப்துல அஜீஸ் ராஜாங்க அந்தஸ்தில் வாழ்க்கை நடத்தினர். பெருமையும் மேன்மையும் தலை சிறந்து விளங்கியது. ஆரம்ப காலமுதல் அவருக்கு கீர்த்தியும் ஆடம்பர வாழ்க்கையும் வேண்டியிருந்தது.

இப்போது அவர் ஓர் கலீபாவின் மருமகன் என்ற சம்பந்தத்தை அடைந்து விட்டதும் ஏற்கனவே யுள்ள தம் அவாவை நிறைவேற்றுவதில் ஈடுபட்டார்.

அவருடைய நண்பர்களுள் ஒருவரான ஸயீத்பின் அப்துல் அஜீஸ் விவரிக்கிறுர் :—

என் நண்பர் உமர்பின் அப்துல் அஜீசுக்கு கலியாணம் நடந்த தினத்தன்று அவர் செல்வந்தராக இருந்திருக்கவில்லை. ஆனல் அடுத்த தினமே அவர் செல்வந்தராகி விட்டார். நேர்த்தியான உடைகளை அணிவதிலும் தன் வீட்டை மிக்க விலையுயர்ந்த சாமான்களைக் கொண்டு அலங்கரிக்கச் செய்வதிலும் அவர் மும்முரமாக வேலை செய்துவந்தார்.

மற்ருெரு சமயம் நான் அவரது வீட்டிற்குச் சென்றபோது அங்குள்ள செய் நேர்த்தியைக் கண்டு பிரமித்து விட்டேன்.

கலீபா அப்துல் மலிக் மாளிகையினும் அவ்வித அலங்காரத் தோற்றம் தென்படா தென்பதை நான் நிச்சயமாய்க் கூறுவேன்.

இவ்வாறெல்லாம் இருந்த போதிலும் சரியே அவர் தம்முடைய குணதிசயங்களில் கொஞ்சங்கூட வித்தியாசத்திற்கு இடந்தரவில்லை. தாழ்மை, நல்லுபசாரம், பெருந்தன்மை, பொறுமை யாவும் அவரில் குடிகொண்டிருந்தன. கலியாணத்திற்குப் பின்னரும் அவர், தஹஜ்ஜுத் தொழுகையை விட்டார் இல்லை.

ஹிஜாஸ் கவர்னர் பதவி

கி. பி. 668-ல்கலீபா அப்துல் மலிக் காலமானர். அவருக்குப் பின் அவர் குமாரர் வலீத்பின் அப்துல் மலிக் பட்டத்திற்கு வந்தார். இப்புதிய கலீபாவுங்கூட, ஹஸ்ரத் உமர்பின் அப்துல் அஜீஸ் உடைய கல்வி வித்தையின் சிறப்பைக் குறித்து சிலாகித்துப் பேசிவந்தார். அதற்கப்பால் அவர், அவரை ஹிஜாஸ் கவர்னராக நியமனம் செய்தார். பிறகு ஒருவாரம் சென்றதும் அவரை மதீனவுக்கு அனுப்பப் பட்டது.

உமர்பின் அப்துல் அஜீஸ் மதீனு போய்ச் சேர்ந்து அங்குள்ள உத்தமர்களேயும் அறிவாளர்களேயும் கண்டு பேசினுர்கள்.

அவர்களிடம் தம் விசுவாச பான்மையை வெளியிட்டார். ஹிஜாஸ் வாசிகள், ஏற்கனவேயுள்ள தங்கள் அதிகாரிகளின் கொடுமை யான கட்டளேகளேச் சகிக்கொண்ணுத விதத்தில் சலிப்புடன் ஒழுகி வந்தபடியால் உமர் இப்னு அப்துல் அஜீஸை அவர்கள் தங்கள் மனப் பூர்த்தியுடன் ஒப்புக்கொண்டது மட்டுமன்றி அவர் ஆண்டவன் சார் பாக அவனது கிருபையைக் கொண்டு வந்துள்ள ஓர் வானவரைப் போன்றவர் என்பதாகவும் அவரை மதித்து ஆண்டவனுக்கு நன்றி பாராட்டினுர்கள். இரண்டு வாரங்கள் வரையிலும் அங்குள்ள தர்பார் நடவடிக்கைகளின் நிலேமையை ஆராய்ந்தறிந்து, அன்னுர், அறிவாளர் களேக் கொண்டுள்ள ஆலோசனேச்சபை யொன்றை நடத்தி வைத்தார்.

சபையோரின் ஒத்த தீர்மானங்களுக்கேற்ப ஆட்சிக்குரிய சட்ட திட்டங்களே பிறப்பித்துள்ளார்.

கி. பி. 676 ஆண்டு வரையில் தான் அவர், கவர்னர் பதவி வாய்ந்திருந்தார். இக்காலத்திற்கிடையே அநேக அரிய கட்டிடங்களே கட்டிவைத்தார்.

நபவி பள்ளிவாசலின் விஸ்தரிப்புவேலேயையும் மிக்க ஊக்கத் துடன் செய்து முடித்தார். கி. பி. 677-ல் அவரை திமிஷ்க் நகருக்கு அழைக்கப்பட்டது.

கிலாபத் ஆட்சி

679-வது ஆண்டில் திமிஷ்க் நகரில் கலீபாவாக இருந்து வந்த வலீத் பின் மலிக் மாரடைப்பின் காரணமாய் காலமானுர். அது ஹஸ்ரத் உமர் இப்னுஅப்துல் அஜீஸ் திமஷ்க் நகரிலேயே வசித்து வந்த காலம்.

கலீபாவலீத் இப்னுஅப்துல் மலிக், காலமாய் விட்டதும் அவரது பதவியில் அவரது சகோதரர் சுலேமான் இப்னுஅப்துல் மலிக் அமர்ந் தார், அதாவது அவருக்கே பட்டம் சூட்டப்பட்டது. புதியகலீபா சுலேமானுக்கும் ஹஸ்ரத் உமர் இப்னுஅப்துல் அஜீஸ்பால் அதிக அன்பும் பிரீதியும் ஏற்பட்டிருந்தன. அவரும், அன்னுரின் கல்வி வித்தையின் திறமையைக்குறித்து அவரை சிலாகித்துப் பேசுவார். அவர்தம் பெரும்பாலான காரியங்களில் அவருடைய யோசனேயைக் கேட்டு அதன்படியே காரியங்களேயும் நடத்துவார்.

682-வது ஆண்டில், கலீபா சுலேமான் நோவுற்ருர். நோய் நாள டைவில் அதிகரித்தது. சௌக்கியமேற்படும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லாமற் போனபோது, அவர் இரகசியமானதோர் கடிதமொன்றை எழுதி, அதை தம்கைப்பெட்டியில் பத்திரமாய் வைத்து, தாம்கால

மானபிறகே எடுத்து வாசிக்குமாறு தம்மைச் சேர்ந்த முக்கியஸ்தர் களுக்கு கட்டளை யிட்டார்.

அக்கடிதத்தை எழுதிய பின்பு, அவர் சிலநாட்களே உயிரோடி ருந்தார். உயிர் துறந்தபின் நல்லடக்கம் செய்யப்பட்டதும், அக் கடிதத்தை எடுத்து படித்துப் பார்த்தபோது, அதில், பின்வரும் வாக்கியங்களே வரையப்பட்டிருந்தன.

"நான் என்குமாரன் தாவூத் இப்னு சுலைமானையே எனக்குப்பிறகு கலீபாவாக்க எண்ணியிருந்தேன். ஆனால் அதற்கான தகுதி அவருக்கு இல்லை என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர், சுபாவத்தில் அநீ தியும் அதிக்கிரமச் செயல்களும் மலிந்து கிடக்கின்றன. ஆனது பற்றி எனக்குப்பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸையே கலீபாவாக தேர்ந் தெடுத்து அவரைகிலாபத் பதவியில் அமர்த்து மாறு கோருகிறேன்"

அதிசயிக்கத் தக்க மாறுபாடு

உமர் இப்னு அப்துல் அஜீஸ் தம்விவாகத்திற்குப்பின் கம்பீர வாழ்க்கையில் ஈடுபட்டு விட்டார் எனமேலே கூறப்பட்டுள்ளது. எந் நேரமும் ஆனந்த வாழ்க்கையில் அமர்ந்திருந்த அன்னார், கிலாபத் பதவியை ஏற்றுக்கொண்டவுடன் அவர் சுபாவநிலை ஒரு மிக்க மாற்ற மடைந்து விட்டது.

அளவிறந்த தாழ்மையும் ஆடம்பரமற்ற சாதாரண வாழ்க்கையின் பரிபூரண அம்சங்களும் அவரில் தென்பட ஆரம்பித்து விட்டன. அவர்கைவசமிருந்து வந்த ஆறுதலுக்கான அனுகூலப் பொருள் களையாவும் அவர்தம் கைபடவே ஏழைமக்களுக்கு தானதருமத்தின் மூலம் பகர்ந்து விட்டார்.

அப்பால், அவர், ஜீவித்தலின் லக்ஷியங்கள் அனைத்தும் சாதாரண வாழ்க்கையின் லக்ஷியங்களாகி விட்டன.

அவர் மனைவியார் பாத்திமா பெயருள்ளவர், அழகில் சிறந்தவர் தம்கணவரது சாதாரணவாழ்க்கையின் போக்கைக்கண்ட அவரும் அதேவிதமாய் அவரை பின்பற்றி நடக்க தொடர்ந்து விட்டார். அவரும் தம் விலையுயர்ந்த அநேக பொருள்களை தம் கைகளினாலே எடுத்து எளிய விதவைகளுக்கிடை இனமாக பகர்ந்து விட்டார்.

சீர்திருத்தங்கள்

ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் கிலாபத் பதவியை ஏற்ற வுடன் யாவற்றிற்கும் முதலாவதாக உயர்தரக் கல்வி கற்பதற்கான பாடசாலைகளை திறந்துவைத்தார்; இடந்தோறும் ஏழை அனாதைச்சாலை களைத்திறந்தார்.

பல்வேறு ஸ்தலங்களில் உள்ள அறிவாளர்களைக் கொண்டதோர் ஆலோசனை சபையை ஸ்தாபித்தார். ஏற்கனவே வேலைபார்த்து வந்த அதிகாரிகளுக்கிடை எவரெவர்கள் அநீதமும் இரக்கமின்மையும் படைத்தவர்கள் என்பதாகத் தெரிந்ததோ அத்தனைபேர்களையும் வேலைகளிலிருந்து நீக்கிவிட்டு அவர்கள் காலி ஸ்தானங்களில் நல்ல தகுதி வாய்ந்தவர்களை நியமனம் செய்தார்கள். இந்த காரியங்களில் அவர் தாமே விசேஷ சிரத்தை காட்டிவந்தார்.

இத்தகைய ஏற்பாடுகளை முடித்துவிட்டு ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ், சிஸ்லிதீவு (பிரன்சு இலாகா) வின் மீது படையெடுத்தார். ஏனெனில் அங்குள்ள கிறிஸ்தவர்கள் சதா அநீதமாக மக்களுடன் பழகி வந்தார்கள்.

ஆண்டவன் கிருபையால் சில தினங்களுக்குள் சிஸ்லியை வெற்றியடைந்தார். வெற்றியேற்பட்டதும் முஸ்லிம்கள் மிக்க குதூகலமாக தீவுக்குள் பிரவேசிக்கலானார்கள்.

முஸ்லிம் அல்லாதாருடனும் நல்லுபசாரம்

பனு உமையா காலத்தில் முஸ்லிம் அல்லாதாரோடு முஸ்லிம்களில் பெரும்பாலார் நல்லுபசாரத்தில் போதியவாறு கவனஞ்செலுத்தாமலிருந்தனர்.

ஆனால் ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஆட்சி ஏற்பட்டதும் போதியளவிற்கு உபசாரம் ஏற்பட்டது, அவர்கள் பாத்திய உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு வந்தன, இன்னும் அவர்களின் ஆறுதல்களுக்குரிய சகல சௌகரியங்களும் ஏற்பட்டு விட்டன.

ஹஸ்ரத் உமரின் எளிய வாழ்க்கை

அத்தாட்சிக்குரிய அதிசய நிகழ்ச்சி

ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ், கிலாபத் சிம்மாசனத்திற்கு வந்தபின்னர், அவர் சாதாரணவாழ்க்கையை மேற்கொண்டு விட்டார் என்பதற்கு ஊர்ஜிதப்படுத்த ஒரு நாள் அவர்கள், திமஷ்க் நகரிலுள்ள முஸ்தபா பஜாருக்குள் நுழைந்து நோட்டமிட்டு வந்த சமயத்தில் அவரைப்பார்ப்போர், 'இவர் யாரோ ஒரு கூலி' என்று நினைக்கக்கூடிய நிலைமையில் இருந்தபடியால், உண்மையாகவே, அங்கு வந்திருந்த ஷாம் நாட்டு வியாபாரி ஒருவர் இவரை இன்னாரென்று அறியாமல் கூலிவேலைக்காக அழைத்தார். ஷாம் நாட்டு வியாபாரி அது சமயம் தாம் விலைகொடுத்து வாங்கியிருந்த விறகு கட்டொன்றை தம் வீட்டுக்கு எடுத்துச் செல்லுமாறு சொன்னார்.

சொன்னதும் ஹஸ்ரத் அவர்கள் அதற்கிசைந்து அக்கட்டையை தம் தலைமேல் தூக்கிச் சென்றார்கள். வியாபாரி முன்னும் ஹஸ்ரத் பின்னுமாக போகிறார்கள். ஆனால் வழியில் ஹஸ்ரத் கலீபாவை அறிந்த சிலர், அவர்களை மிக்க, தாழ்மையுடன் சலாம் சொல்வதைக் கண்ட வியாபாரி, ஆச்சரியமுற்று, சலாம் சொல்லிய ஒருவரிடம் இவர்யார்? என்று விசாரிக்க, அவர்கள், இவர், அமீருல் மூமினீன் உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஆவார் உனக்குத்தெரியாதா? எனக்கேட்டார்கள். அவர்கள் உடனே அதேவிடத்தில் நின்று, ஹஸ்ரத் அவர்களிடத்தில் மன்னிப்பு கேட்கலானார்.

ஆனால், ஹஸ்ரத் அவர்களோ அவனை நோக்கி "நீர் அதைப்பற்றி சஞ்சலப்படவேண்டாம், நான் உங்களுக்கு தொண்டுபுரியவே ஏற்பட்டவன், உங்கள் சேவையால் என் கண்ணியத்திற்கு குந்தகம் ஏற்படப் போவதில்லை" என்று ஆறுதலளித்தார்கள்.

பொது நிதிவிஷயத்தில் விசேஷ அக்கரை

'தஸ்கிரதுஸ் ஸாலிஹீன்' என்ற அரிய கிதாபில் வந்திருக்கிறது: ஒருநாள் ஹஸ்ரத் உமர் இப்னு அப்துல் அஜீஸ், இரவு 11-மணிக்கு பொது நிதி ஆபீஸில் உட்கார்ந்து கணக்கு எழுதிக்கொண்டிருந்த சமயம் அவர்களது நண்பரொருவர் அவரைக்காண அங்கே வந்துவிட்டார்.

சலாமுக்குப்பின்னர் சம்பாஷணை ஆரம்பித்தது. ஹஸ்ரத் அவர்கள் உடனே ஆபீஸில் எரிந்துகொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டார்கள்.

அதைக்கண்டு நண்பர் பெரிதும் ஆச்சரியமுற்று, தாங்கள் ஏன் விளக்கை அணைத்தீர்கள் எனக்கேட்டதற்கு "நண்பா! இந்த விளக்கில் எரியும் எண்ணெய் என் சொந்த பணத்தைக்கொண்டு வாங்கினதல்ல. இதுவோ, பொதுநிதி கணக்கிலிருந்து விலைக்கு வாங்கப்பட்டது. ஆனதுபற்றி பொது நிதி வேலைகளிலேயே இவ்விளக்கின் எண்ணெயை உபயோகித்துக் கொள்ளவேண்டுமே தவிர பொதுநிதிக்கு சம்பந்த மற்ற விஷயங்களில் இதை உபயோகித்தல் தகாது. இப்போது நம்மிருவருக்கிடை நடைபெறும் சம்பாஷணைக்கும் நிதிக்கும் சம்பந்தமே கிடையாது. இதுமுற்றிலும் நம் சொந்த சமாச்சாரங்களானபடியால் விளக்கை அணைத்துவிட நேர்ந்தது"

மரணம்

கி. பி. 683-க்குச் சரியான ஹிஜ்ரி 101ல் ஹஸ்ரத் இப்னு அஜீஸ் அவர்கள் காலமானார்கள்.

மாயமாய்

மறைந்த மங்கை.

(தொடர் கதை 6-வது பகுதி)

11-வது அத்தியாயம்

ஷம்ஸ் மறுநாள் அதிகாலையில் எழுந்து கீழேயுள்ள ஹாலுக்கு வந்தார். அவர் அன்றிரவு பக்கத்து வீட்டுக்கு கார் வந்ததையும் அந்த காரில் வந்தவனுடன் ஸூஸி சென்றதையும் தனது அறையின் ஜன்னல் வழியாக பார்த்திருந்தார். அவர்கள் எங்கு போனர்களென்பதை சோடே கவனித்திருப்பானென்றும் எங்கு இருந்தாவது போன்மூலம் தெரிவிப்பானென்றும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். மற்ற அறையிலுள்ளவர்கள் யாரும் விழித்து, கீழ்வரவில்லை. தான் தனியாக உட்கார்ந்திருக்கும்போது, மேஜையின்பேரில் முன்பே காலைபத்திரிகைகள் வைக்கப்பட்டிருந்ததைக் கவனித்தார். தற்செயலாக மேலுள்ள பத்திரிகையைப் பார்த்தார். பார்த்தபின் அதை மேஜையின் பேரில் திருப்பிவைக்கும் சமையத்தில், கடைசி செய்திகள் என்று போடப்பட்டதில் தனது பார்வை செல்லவே, திருப்பி எடுத்து அதைப்படித்தார்.

“ரூய்னியினருகே பள்ளத்தில் கார் விபத்து” என்று தலைப்பிருந்தது. ஒரு பெண் இரவு 1 மணி சுமாருக்கு கார் ஓட்டி பள்ளத்தில் விழுந்ததாகவும், அவள் யாரென்று தெரியவில்லையென்றும், கையில் இரு மோதிரங்கள் அணியப்பட்டிருப்பதாகவும் தற்போது ஆஸ்பத்ரியில் இருப்பதாகவும், விபரமாக போடப்பட்டிருந்தது. அதை ஷம்ஸ் படித்ததும், அது ஸூஸிதானென்று நினைத்தார். அங்கிருந்து வீட்டின் வெளியே வந்தார். “இந்த கார் விபத்தைப்பற்றி இன்னும் விபரம் அறியவேண்டும்” என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு போனர். அங்கு ஒரு அறையில் இன்ஸ்பெக்டர் தாமஸும் இன்ஸ்பெக்டர் பாட்கினும் இருந்தனர். “தாமஸ்! சிலகாரியங்கள் சிக்கிரமாக செய்யவேண்டும். ஏனென்று கேட்காதீர்கள். இரண்டு கான்ஸ்டேபிளை அனுப்பி ஸன்கோர்ட் டெர்ரஸ் நெ. 6, நெ. 8 இருவீடுகளையும் கவனிக்கச் சொல்லுங்கள்” என்று ஷம்ஸ் சொன்னர்.

"ஏதோ ஒருபெண் ஒரு வீட்டிற்கு வந்திருக்கவேண்டும். அவளை காணேமென்று சொன்னீர்களே அந்த வீடா?"

"ஆம்! அந்த வீடுகளிலிருந்து யாரையாவது, பலவந்தமாகவோ, உடம்பு அசௌகர்ய காரணமாகவே, வெளியே கொண்டுவர முயற்சிப் பவர்களைத் தடுத்து, அவர்களைப் பிடிக்கவேண்டும்"

"அவ்வாறு எப்படிசெய்யமுடியும். அதற்கு வாரண்டு வேண்டும். வாரண்டு எடுக்க காரணம் வேண்டும்"

"கொலைவிஷயமாக சம்மந்தப்பட்டவனை பிடிக்கவாரண்டு, காரணம் எல்லாம் வந்தபின் பிடிப்பதானல் என்ன ஒழுங்கு!"

"கொலையா ?"

"ஆம், வெஸ்டர்பியின் கொலை! நான் சொல்கிறபடி பிடித்தால், அவர்கள் ஷெ கொலையில் சம்பந்தப்பட்டவர்கள்தான். ஒலிவாவும் ரூனிபர்கும் அந்த வீடுகளில் எங்கோ மறைத்து வைக்கப்பட்டிருக் கிருர்கள்"

"ஓஹோ அவ்விருவர்களை அவ்வீட்டைவிட்டு வெளிக்கொண்டு போக முயற்சிப்பார்க ளென்று நினைக்கிறீர்களா?"

"ஆம்"

"அப்படியானல் இப்போதே இருபேர்களை அனுப்பி வைக்கிறேன்" என்று தாமஸ் சொல்லி பக்கத்து அறைக்குப் போய் அங்குள்ள இரு வர்களுக்கு சொல்லவேண்டியதை சொல்லியனுப்பியபின் ஷம்ஸிடம் வந்தார். ஷம்ஸும் பாட்கினும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"அந்த மோட்டார் விபத்தா? எங்களுக்கும் சமாச்சாரம் கிடைத் தது. அந்த கார் ஓரிடத்திலிருந்து திருடப்பட்டதாம். அது ஒரு பாதிரியைச் சேர்ந்ததாம். அவர்காரை இரவுகாணேமென்று கம்பளேன்ட் செய்தார். இங்கு அந்த பெண் ஓட்டி ஆபத்து ஏற்பட்டதும் அதே கார்தான் என்று ரூம்னியின் பக்கத்திலுள்ள ஹைத் என்னுமிடத்தி லிருக்கும் போலீஸ் தெரிவித்தனர். அங்கு டைர் வெடித்த ஒரு மோட்டார் சைகிலும் இருந்ததாம்" என்று பாட்கின் சொன்னர்.

"ஹா! அப்படியா!" என்று திகைப்புடன் ஷம்ஸ் கேட்டார்

"ஆம் அந்த மோட்டார் சைகிள் நெ X. L 1007, அது இங்கு ஒரு கடையைச் சேர்ந்ததாக தெரிகிறது. அந்த கடையில் இன்னும் விசா ரிக்கவில்லை" என்றும் தெரிவித்தார் பாட்கின்.

"அந்த மோட்டார் சைகிள் விஷயம் எனக்கு தெரியும். அதை ஓட்டியவனைப்பற்றி தான் அறியவேண்டும். எனது அஸிஸ்டென்ட் சோடே அந்த மோட்டார்சைகிளை வாடகைக்கு அமர்த்தியவன். இந்த அபாயத்தில் மாட்டிய பெண்ணைக் கவனிக்குமாறு சொல்லியிருந்தேன். எதற்கும் இது எங்கு நடந்திருக்கிறது. அந்த இடம் எங்கிருக்கிறது யென்று விபரியுங்கள். இது பள்ளத்தை கவனியாமல் ஏற்பட்ட விபத்தல்ல" என்று ஷம்ஸ் பதைபதைப்புடன் சொன்னார்.

"ஏன் அப்படி சொல்கிறீர்கள்?"

"காரை அந்த பெண் ஓட்டிச் செல்லவில்லை. இன்னொரு மனிதன் ஓட்டிச்சென்றான். அந்த காரில் அந்த பெண்ணுமிருந்தாள். ஏதோ காரணத்தினால் பள்ளத்தில் வேணுமென்றே காரை ஓட்டியிருக்க வேண்டும்."

"அந்த இடம் ரோட்டில் காடு ஒருபுறமாக துவர்க்கமாகிறதே அங்கிருந்து சுமார் 200 கஜம் போனால் அந்த பள்ளத்தைப் பார்க்கலாம்" என்று பாட்கின் சொன்னதும் ஷம்ஸ் உடனே பிறப்பட எழுந்தார். இன்ஸ்பெக்டர் தாமஸ் ஷமஸிடம் "கொஞ்சம் நில்லுங்கள். நாங்கள் வெஸ்டர்பியை கொலைசெய்தவன் எவனென்று யோசித்துக் கொண்டே, ரேனிபர்கை மறந்துவிட்டோம். பிரான்ஸில் ரனிபர்கின் ஆட்கள் அவரைப்பற்றிக் கவலைபடுவதாகவும், அவர் சவுக்கியமாக யிருக்கிறாரவென்றும் பிரென்ச் போலீஸ், லண்டன் ஸ்காட்லன்ட் யார்டைகேட்கிறார்கள். நீங்கள், ரேனிபர்கை கொலையாளிகள் பிடித்து வைத்திருக்கக்கூடு மென்று சொல்லுகிறீர்கள். ரேனிபர்க் உயிருடனிருக்கிறரென்று உங்களுக்கு நன்றாகத் தெரியுமா?" என்று கேட்டார்.

"ரேனிபர்க்குக்கு என்ன நேர்ந்ததோ, எனக்கு அதைப்பற்றி கவலையில்லை. ஆனால் அவர் உயிருடனிருக்கிறார் என்று நினைக்கிறேன்" என்று சொல்லியபடி ஷம்ஸ் போலீஸ் ஸ்டேஷனை விட்டு வெளிவந்தார். அவர் போவதை பார்த்துக்கொண்டேயிருந்த இன்ஸ்பெக்டர் தாமஸ் "இவர் சொல்லுவதில் அர்த்தமென்ன? ஒன்றும் விளங்கவில்லையே" என்று பாட்கினைக் கேட்டார்.

"ஷம்ஸுக்கு ரேனிபர்க் ஒரு பெரிய மனுஷனாக தெரியவில்லை போல் தோன்றுகிறது" என்று பாட்கின் சொன்னார்.

"ஓஹோ! ஆம் ரேனிபர்க் திடீரென்று பெரிய பணக்காரனானதைப் பற்றி ஒவ்வொருவிதமாக சொல்லுகிறார்கள். அமெரிக்காவில் மதுவிலக்கு

சட்டமிருக்கும்போது திருட்டு சாராய வியாபாரம் நடத்தியதாகவும், திருட்டுத் தனமான துப்பாக்கி வியாபாரம் செய்து பணம் சம்பாதித்ததாகவும் சொல்லுகிறார்கள். சிலகாலத்திற்கு முன் அவன் சினிமா நடிகனாகயிருந்ததாகவும் கேள்விபட்டுள்ளேன்'' என்று சொன்னார் தாமஸ்.

ஷம்ஸ் தனது காரை, முன்சோடே விட்டுவைத்த ஷெட்டி லிருந்து எடுத்து, இன்ஸ்பெக்டர் சொல்லியபடி விபத்து நடந்த விடத்துக்கு சிக்கிரமாக ஓட்டிச்சென்றார். அங்குபோனதும் காரை விட்டிறங்கி, அங்கு அக்கம் பக்கத்திலுள்ள செடி முதலியவைகளை கவனித்தார். மோட்டார் சைகில் டைர் வெடித்ததால், செடிகளில் மோதியபோது, செடிகள் நொருங்கி சேதமாயிருக்கும் இடத்தை கவனித்தார். அதற்கருகாமையில் ஒரு மரத்தின் தண்டில் ஒரு துவாரத்தைப் பார்த்தார். துப்பாக்கி குண்டு பட்டிருக்கவேண்டுமென்று நினைத்தார். அதைப் பார்த்ததும், சோடேவின் ஞாபகம் வந்து, தன்னை யறியாமல் உடம்பு நடுங்கிற்று. சிறுவயதிலிருந்து தனது அஸிஸ்டெண்ட் வேலை பார்த்துவரும் சோடேவின் பேரில் அதிக பிரியம். அவனுக்கு தற்போது என்ன நேர்ந்ததோ என்று கவலையுற்றார். பின்பு அந்த பள்ளத்தினருகே வந்து பள்ளத்தை உற்று நோக்கினார். "அதை ஓட்டியவன், பள்ளத்தில் கார் விழுவதற்கு முன் குதித்திருக்க வேண்டும்'' என்றெண்ணி அங்கேயே அக்கம்பக்கம் கவனித்தார். அங்குள்ள செடிகளினிடையே துப்பாக்கி ரவையின் மேல் மூடி ஒன்று அகப்பட்டது. துப்பாக்கியால் சுட்டதும் அந்த ரவையின்மேல் மூடி பக்கத்தில் விழுவது வழமை. ஆதலால் அங்கிருந்து சுடப்பட்டிருக்கவேண்டுமென்று தீர்மானித்து, இன்னும் தேடிப்பார்த்தார். அங்கு மொத்தம் மூன்று ரவைகளின் மேல் மூடிகளைக் கண்டுபிடித்தார். "இந்த துப்பாக்கி பிரயோகத்தில் சோடே இறந்தானோ! இறந்திருந்தால் கொலை செய்தவன் அவன் உடம்பையும் தூக்கிக்கொண்டுபோய் விட்டானோ'' என்று சிந்தித்தவாறு இன்னும் ஏதாவது கிடைக்கிறதா வென்று தேடி பார்த்தார். ஒருயிடத்தில் செடிகள் முறிந்திருப்பதுடன், சிகப்பாக அங்கு தெரிந்தது. தனது கையை வைத்துப்பார்த்தார். இரத்தம்! காரி லிருந்து குதிக்கும்போது காயம் ஏற்பட்டிருக்கலாம் என்று நினைத்து அங்கேயே இன்னும் தன்னிடமிருந்த பூதக்கண்ணாடியின்மூலம் கூர்ந்து கவனித்தார். பக்கத்தில் ஒரு நரைத்த மயிர் கிடந்தது. அதை

தனது ஜேபியிலுள்ள ஒரு காகித கூட்டினுள் போட்டுக்கொண்டார். இந்த மயிர் கொலையாளியைக் கண்டுபிடிக்க உபயோகப்படுமா வென்றும் சிந்தித்தார். தான் சந்தேகப்படக்கூடிய ஆட்களில் யாருக்கு நரைத்த மயிர் உண்டென்று யோசித்தார். சாதிர், பிரேஸர், ஜான், டொனல்ட் யாருக்குமில்லையே! ஏன்? பிரபஸர் ஸான்டர்! ஆம் அவருக்கு நரைத்த மயிர்! பார்ப்பதற்கு மிகவும் சாந்த குணமுள்ளவராகத் தோன்றும் பிரபஸர் இக்கொலை கூட்டத்திற்கு தலைவனா! இருக்கலாம். ஸூஸியுடன் ஹோட்டலில் பேசிக்கொண்டிருக்கும் போது அங்கு வந்து மறைவில் நின்றவன் இந்த பிரபஸரின் அஸிஸ்டென்ட் ஜான்தானே. இவ்வாறெல்லாம் சிந்தித்தவாறு பள்ளத்தினருகே போய், கார் விழுந்திருக்கும் இடத்தைப் பார்த்தார். அங்கு கிழே ஒரு கிழவனும், ஒரு கான்ஸ்டேபிலும், இன்னும் இருமனிதர்களும் ஏதோ பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் இருப்பதைப் பார்த்து அவர்களினருகே சென்றார். காரின் சொந்தக்காரரான பாதிரி, காரை இன்ஷூர் செய்திருந்ததால், இன்ஷூரன்ஸ் கம்பெனியிலுள்ள இருவர் அங்குள்ளவர்கள் என்றறிந்தார். அந்த கிழவன், அவ்விபத்து நேர்ந்ததும் தானும் ஒரு வாலிபனும் அங்கு செய்தவைகளை விபரித்துக் கொண்டிருந்தான்.

அதைக்கேட்ட ஷம்ஸ் "விபத்து நடந்தபின் ஒரு வாலிபன் வந்தானா?" என்று கேட்டார். "ஆம்" என்று சொல்லவே அக்கிழவனிடம் அவ்வாலிபன் எவ்வாறிருந்தான் என்று விபரத்தைக் கேட்டு, அங்கிருந்தவன் தனது அஸிஸ்டென்ட் சோடே யென்று தீர்மானித்தார். "அப்படியாகில் விபத்து நேர்ந்ததும், காரைஓட்டிய கொலையாளி ஓடியிருப்பான். அதற்கு கொஞ்ச நேரத்திற்குப்பின் இக்கிழவனுடன் சோடே யிருந்திருப்பதால், சோடேவுக்கு ஒரு ஆபத்தும் நேரிடவில்லை" என்று தன்மனதிற்கு தைரியம் சொல்லிக்கொண்டார். பிறகு நசுங்கி பிறண்டு கிடக்கும் காரைக் கவனித்தார். அதில் ஓட்டுபவன் பக்கத்திலுள்ள கதவில் ஏதோ கருப்பாக எண்ணை கொஞ்சம் தேய்ந்திருந்தது போல் தெரிந்தது. அங்கிருந்து நேராக, ஸூஸியை கொண்டு போகப்பட்ட ஆஸ்பத்திரிக்குச் சென்றார். அங்கு பெண்கள் போடப்படும் வார்டில் ஸூஸி ஒரு பிணம் போல் கிடந்தாள். தலையில் ஒரு கட்டு போடப்பட்டிருந்தது. அவள் மூச்சு விடுவதே தெரியாமலிருந்தது. அச்சமயத்தில் அவளின் நிலைமையை யறிய டாக்டர் ஸ்டான் அங்கு வந்தார். அவரிடம் ஷம்ஸ் மெதுவாக ஏதோ கேட்

187026.

டார். அதற்கு டாக்டர் ஸ்டான் "இவளால் சிக்கிரம் பேசக்கூடு மென்று நான் நினைக்கவில்லை, நான் முதல் நினைத்தவாறில்லை. நிலைமை மோசமாக யிருக்கிறது. இவளும் நல்லவளாகத்தெரியவில்லை. இவள் ஓட்டிவந்த காரும் திருடியதாமே."

"ஆம். எனக்குத் தெரியும். இருந்தாலும் இவள் செய்த தப்புகளைவிட, இவள் மேல் சுமத்தப்பட்ட தப்புகள் அதிகமிருக்குமென்று நினைக்கிறேன்" என்றார் ஷம்ஸ். இதைக் கேட்டதும் டாக்டர் ஆச்சரியமாகி இருவரும் சம்பாஷிக்கத்துடங்கினர். சம்பாஷணை முடிவில் டாக்டர் ஷம்ஸுடன் மிகவும் நெருங்கிய சிநேகதனைப் போலானர். ஸூஸியின் பக்கத்தில் ஒரு நர்ஸ் எப்பொழுதும் உட்கார்ந்திருந்தால் நலமென்று ஷம்ஸ் சொல்ல, டாக்டர் அவ்வாறு செய்வதாக ஒத்துக் கொண்டார். ஷம்ஸ் அங்கிருந்து புறப்பட்டு போக்ஸ்டோன் வந்து காரை ஷெட்டில் விட்டுவிட்டு, நடந்து 6ஆ வீட்டிற்குப்போனர். அவ்வீட்டிற்கு முன்சாதாரண உடையணிந்த போலீஸ் ஆட்கள் இருவர் அங்கு நின்று கவனித்துக் கொண்டிருப்பதையும் பார்த்தார். தற்போது இவர்கள் அவ்வீடுகளை கவனிப்பதை, எதிரிகள் அறிந்தால் சிக்கிரம் தப்பித்துக் கொண்டு போக முயற்சிப்பார்களென்று நினைத்து, அவர்களிருவரையும் போகுமாறு ஜாடை காட்டினர். அதைக் கவனித்த அவ்விருவரும் அங்கிருந்து சென்று விட்டனர். ஷம்ஸ் நேராக மெத்தையிலுள்ள தனது அறைக்குப்போய், பிறகு அங்கிருந்து திரும்பி படிக்கட்டினருகே வரும்போது, தெருவில் ஒரு கார் வேகமாக ஓடும் சப்தம் கேட்டது. அதே சமயத்தில் படாரென்று ஒரு சப்தமும் கேட்டது. கீழே ஹாலில் நின்ற மேரியா அலறிசப்தமிட்டாள். முன் ஜன்னலின் கண்ணுடி சிதரியது. ஒரு கருங்கல் மேரியா பக்கத்தில் விழுந்தது. அந்த கல்லோடு கட்டப்பட்டிருந்த ஒரு கவர், காகிதகூடும் கீழே கிடந்தது. அந்த கூட்டின் மேல் ஷம்ஸின் தற்போது மாற்றப்பட்டுள்ள பெயர் தனிதனி எழுத்துகளாக எழுதியிருந்தது. ஷம்ஸ் அதை எடுத்து அக்கூட்டை கிழித்து, உள்ளுள்ள கடிதத்தைப்பார்த்தார். பென்ஸிலினல் "ஷம்ஸ்! ஓடிப்போ. இந்த கேஸில் சம்பந்தப்படாதே. உனது அஸிஸ்டென்ட் சோடேவுக்கும் வேறு வேலை ஏதாவது கொடு. இதில் இன்னும் சம்பந்தப்பட்டாயாகில், சோடேவின் பிணத்தைப் பார்க்க நேரிடும்" என்று எழுதப் பட்டிருந்தது.

அத்தியாயம் 12

"அது என்ன? உங்களுக்காகவா போடப்பட்டது? யார் போட்டது? ஏன் இவ்வாறு"

"ஆம் மேரியா எனக்காக எழுதியகடிதம்" என்று சொல்லிக் கொண்டே உடைந்த ஜன்னலைப்பார்த்தார். சிறிது நேரம் ஜன்னலைப் பார்த்தபின் மேரியாவிடம் வந்தார்.

அவள் "இந்தவாரம் முழுவதும் ஒழுங்காகவேயில்லை. நான் இன்று அந்த இருவர்களுக்கும் காலி செய்யுமாறு நோட்டிஸ் கொடுக்கலா மென்று, உங்களைத் தேடினேன். காலையிலிருந்து உங்களைக்காணும். நீங்கள் பக்கத்திலிருந்தால் நலமென்று எண்ணியிருந்தேன். நீங்கள் இல்லாத தால், அவர்களுக்கும் நோட்டீஸ் கொடுக்கவில்லை. தற்போது அவர்கள் எங்கோ வெளியே போயிருக்கிறார்கள்." என்றாள்.

"காலையில் ஒரு அவசர வேலையி நிமித்தம் வெளியே போக வேண்டிய தேற்பட்டது. தற்போதும் எனக்கு இன்னும் வேலையிருக் கிறது. போய் வருகிறேன். வேறு ஏதும் விசேஷம் உண்டா?"

"ஆம். ஸூஸியைப்பற்றி கவலை—காலையிலிருந்து அவளையும் காணும்"

"காலையில் உலாவ எங்காவது போயிருக்கலாம். வர சுணங் கலாம்"

"இருக்கலாம். இதற்குமுன் அவள் இவ்வாறு போனது கிடை யாது. ஆனல் காலை கடலில் குளிக்கபோவது வழக்கம்"

"சரி, அவள் வந்து விடுவாள். இந்த ஜன்னலைப்பற்றிக்கவலை படவேண்டாம். அதை புது கண்ணாடிபோட்டு சரி செய்து, அந்த செலவை எனது கணக்கில் சேர்த்துக்கொள். சீக்கிரமாக செய்து முடி. நான் அநேகமாக இன்றே இங்கிருந்து புறப்பட நேரிடும்"

"திங்கட்கிழமை காலைவரை இருப்பதாக சொன்னீர்களே"

"இந்த கடிதத்தின் காரணமாக நான் இங்கிருந்து போகவேண்டிய தேற்படுகிறது." என்று ஷம்ஸ் சொல்லிக்கொண்டே அந்த கடிதத்தை தனது ஜேபியில் போட்டுக் கொண்டார்.

பிறகு அவ்வீட்டை விட்டு வெளியில் சென்றார். போகும் போதே "கடிதத்தில் எழுதியபடி செய்தே தீருவார்கள். ஆதலால் இந்த கேஸில் சம்மந்தப்படாதிருக்க வேண்டும். அல்லது தான் சம்மந்தப் படாதிருப்பதாக அவர்களுக்கு தெரியவேண்டும்" என்று தனக்குத் தானே யோசித்துக் கொண்டு, கொஞ்சதூரம் சென்றபின், தன்னை யாரும் பின் தொடரவில்லை யென்பதைக் கவனித்தபின் அங்குள்ள ஒரு டெலிபோனினருகே போய் போலீஸ் ஸ்டேஷனுக்கு போன் செய்தார். அங்கு 6 நெ 8 நெ வீடுகளைக் கவனித்துவந்த இருவரிருந்தனர். அவர்களிடம் மறுபடியும் ஷை வீடுகளைக் கவனிக்குமாறும் ஆனால் இனி வெகு ஜாக்கிரதையாக, தாங்கள் கவனிப்பது மற்ற யாருக்கும் தெரியாதவாறு செய்யுமாறும் போன் மூலம் தெரிவித்தார். பின்பு அங்கிருந்து கடற்கரை யோரமாக சென்றார். இந்த கேஸில் முதலிலிருந்து இதுவரை நடந்தவைகளை யெல்லாம் ஒன்று விடாமல் யோசித்துக் கொண்டே நடந்தார். அச்சமயத்தில் அங்கே நிழலில் உட்கார்ந்திருந்த ஒருவன் இவரைப் பார்த்ததும், நேரே வந்து, "மிஸ்டர் ரோஸன்! என்ன காலை வெயிலில் உலாவ மிக இஷ்டமா?" என்று கேட்டுக் கொண்டே சிரித்தான். ஷம்ஸ் அவனை யாரென்று கவனித்தார். அவன் மேரியாவீட்டில் தங்கியிருந்தவன். எங்கோ கிளர்க் வேலை செய்பவன். அவன் பெயர் எட்மன்ட் என்று முன்பு சொன்னதும் அவருக்கு ஞாபகம் வந்தது. "சும்மா நேரம் போக்கு. நீ சிறு பெண்களுடன் திரிந்து கொண்டிருந்தாயே, ஏன் தனியாக இங்கிருக்கிறாய்" என்று ஷம்ஸ் கேட்டார். எட் மென்ட் அவர் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல தயங்கியபின் "உங்களிடம் உண்மை சொன்னால் என்ன! இன்று அவர்கள் கண்களில் அகப்படாமல். வந்துவிட்டேன். நான் இன்னும் ஒரு வாரம் மேரியா வீட்டில் தங்கலா மென்றுதா னிருந்தேன். ஆனால் அந்த பெண்களுடன் சேர்ந்து சந்தோஷமாக காலத்தை கழிக்க, எனது ஜேபி காலியாகி விட்டது. பணமில்லாமல் அங்கிருப்பது உசிதமல்ல வென்று இங்கு வந்தேன்" என்றான். அவன் சொல்லி முடிப்பதற்குள் ஷம்ஸ் தனது ஜேபியிலிருந்த மணிபர்ஸை எடுத்து அதிலிருந்து சில பண நோட்டுகளை எடுத்து அவனிடம் நீட்டினார்.

"வேண்டாம் ஸார். நான் உங்களிடம் கடன் கேட்கவில்லை. என் நிலைமையைச் சொன்னேன்"

"பரவாயில்லை. இதை வைத்துக் கொள். இதை கடனோ தர்மமோ என்று நினைக்க வேண்டாம். இதற்குப் பகரமாக, நான் சொல்லும் சில வேலைகள் செய்தால் போதும். இன்றிரவு நீ எங்கு போக உத்தேசம்" என்று ஷம்ஸ் கேட்டார்.

"ஓர் டான்ஸுக்கு போகலாமென்று எண்ணம்"

"சரி. இந்த கார்டைப் பார். இதுதான் எனது பெயர். நீ மேரியா வீட்டிற்குப் போக வேண்டாம். அங்குள்ள உனது சாமான்கள் அங்கேயே இருக்கட்டும். அந்த சாமான்களில் எது தவறிப்போனலும் நான் ஜவாப்தாரி. நீ பெஸ்ட் ஹோட்டலில் தங்கு. அங்கு எவ்வளவு செலவாகிறதோ அதை நான் தருகிறேன். அதுவல்லாமல் மேலும் 10 பவுண்ட் தருகிறேன்" என்ருர்.

அவன் அந்தக் கார்டைப் பார்த்து, "நீங்கள் ஷம்ஸா! நான் உங்களுக்கு வேலே செய்ய வேண்டுமா! என்ன கேலி பண்ணுகிறீர்களா?"

"கேலி ஒன்றுமில்லே. நான் சொல்வது உண்மை தான். நீ என்ன செய்யவேண்டு மென்பதை விபரமாகத் தெரிவிக்கிறேன்" என்று ஷம்ஸ் சொல்லி அங்கு நிழலின்கீழ் போடப்பட்ட நாற்காலிகளின் பக்கம் அவனைக் கூப்பிட்டுச் சென்ருர். அங்குள்ள நாற்காலிகளில் இருவரும் உட்கார்ந்தபின், ஷம்ஸ் சுமார் கால்மணி நேரம் அவனிடம் ஏதேதோ சொன்னர். அவன் ஆச்சரியத்துடனும் சந்தோஷத்துடனும் கேட்டுக் கொண்டேயிருந்தான். ஷம்ஸ் அவனிடம் சொல்ல வேண்டியவைகளை சொல்லி முடித்ததும் அவனை விட்டு அங்கிருந்து புறப்பட்டு நேராக 6-ரெ வீட்டிற்கு வந்தார். அன்று மாலே மேரியாவிடம் நான் கட்டாயம் புறப்பட்டே ஆகவேண்டு மென்று சொல்லி, தனது சாமான்களை எடுத்துக் கொண்டு அவ்வீட்டை விட்டுச் சென்ருர்.

இரவு 8 மணி சுமாருக்கு எட்மென்ட் தனது அறையிலிருந்து கீழிறங்கி, தான் டான்ஸுக்குப் போவதாக, அங்கு ஹாலில் நின்று கொண்டிருந்த லூஸியிடம் சொல்லிவிட்டுச் சென்றன். சாதாரணமாக அவ்வீட்டின் வெளிக்கதவு இரவு 11 மணி வரை திறந்திருக்கும். அங்கு தங்குபவர்களுள் யாராவது வெளியே போய்வர 11 மணிக்கு மேலாகு மென்று தெரிவித்தால், அவர்களுக்கு வெளிக் கதவின் சாவி கொடுக்கப்படும். அதன்படி எட்மென்ட் தன்னிடம் ஒரு சாவியும் வாங்கி வைத்திருந்தான்.

இரவு 12 மணி சுமார். வெளிக்கதவை திறக்கும் சப்தம் சமையலறையில் தூக்கக் கண்ணுடனிருந்த லூஸி கேட்டு, ஹாலுக்கு வந்து பார்த்தாள். எட்மென்ட் வெளிக்கதவை திறந்து உள்வந்து முதல் மெத்தைக்குப் போய் பின்பக்கமுள்ள தனது அறைக்குச் சென்று தாளிட்டதையும் கவனித்தாள். அறையின் கதவை மூடியபின் அறையினுள் வந்தவன் விளக்கை ஏற்றி தான் அணிந்திருந்த ஹாட்டை கழற்றினன். அவன் எட்மென்ட் அல்ல! எட்மென்ட் உடையை யணிந்த ஷம்ஸ்.

(தொடரும்.)

வெளிவந்து விட்டது

ஜவாஹிருல் பவாயித்.

(புதிய ஆறும் பதிப்பு)

இப்புஸ்தகத்தில் 1-வது அல்லாஹு தஆலாவின் திரு நாமங்களாகிய 'அஸ்மாஉல் ஹுஸ்னு' என்னும் அழகிய 99 இஸ்முகளும், ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே தர்ஜுமாக் களும் தக்ஸீறுகளும் காஸியத்துகளும்; 2-வது 'அஸ்மாஉல் இலாம்' அதாவது நபிமார்கள் ஓதிவந்ததும் ஷுருகை விட்டும் தனித்ததுமான 40 அஸ்மாக்களும், அவைகளில் வெளியாகும் அநேக கைபியத்து அஜாயிபு முஃஜிஸாத்து அஸ்றாறு முத லான மட்டில்லாத பிரயோஜனங்களும், 3-வது 'ஹயாத்துல் ஹைவான்' என்னும் உயிர் பிராணிகளாகிய சகல ஜந்துக்கள் ஒவ்வொன்றின் குணாகுணங்களும் அவைகளின் அவயவமென் னும் அங்கங்களால் இன்ஸான்களுக்குப் பற்பல வியாதிகளுக்கு அவிழ் தங்களும், இன்னும் ஹதீதுகளும் ஹிக்காயத்துகளும், 4-வது மனுமுடைய தஃபீர் என்னும் கனவு நூலும், அதில் எவ்வண்ணமாய் கனவு கண்ட காக்ஷிகளுக்கும் விரிவாகிய தஃபீர்களும், அதற்கு அத்தாக்ஷியாகிய அநேக ஹிக்காயத்து களும் 5-வது வைத்திய சுருக்கமென்னும் சகல வியாதிகளுக் கும் நுட்ப பரிகாரங்களும், இன்னும் அநேக பாயிதாக்களும் இருக்கின்றன. இவற்றில் அரபு இஸ்முகளை மாத்திரம் லெத் தோ கிராப்பில் அரபியிலும் மற்றவையெல்லாம் சுத்தத் தமிழா லும் அச்சிட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூ. 6

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

பகுத்தறிவும் மனிதனும்.

(எம். கே. ஏ. எஸ். அஹ்மத் மீரா. சீருடையபுரம்)

உலககோடி சிருஷ்டிகளிலே மனிதனை இறைவன் உயர்வாகப் படைத்திருக்கிறான். இறை சிருஷ்டிகளிலே எந்த ஜீவபிராணிக்கு மல்லாது மனிதனுக்கு மட்டும் 'பகுத்தறிவு' என்னும் ஒப்புயர்வற்ற உயரிய பொக்கிஷத்தை அளித்துள்ளான். இவ்வுயரிய அலாதியான பொருளை (பகுத்தறிவைப்) பயன் படுத்தி மனிதன் உயிர்களனைத்தி லும் உயர்வாக, உன்னதமாகத் திகழவேண்டும். அவ்வாறு திகழ்ப வனைத்தான் மனிதன் என்று கூறமுடியும்.

மனிதன் பிறக்கிறான். வாழ்கிறான் இறக்கிறான். இதுபோன்று ஓரறிவு குறைந்த பிராணிகளும் பிறக்கிறது, வாழ்கிறது, இறக்கிறது. பிறப்பதும் இறப்பதும் உயிர்களனைத்துக்கும் ஒன்றே! ஆனால் வாழ் வது ஒன்றில் மட்டும் மனிதனுக்கும், மிருகத்திற்கும் அரும்பெரும் வித்தியாசங்கள் காணமுடியும்.

உலகத்திலே மாபாதங்களென்று ஐந்து குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்கூறிய பஞ்சமா பாதகங்களைவிட்டும் (பகுத்தறிவைக் கொண்டு) தவிர்ந்து நடப்பவன்தான் 'மனிதன்' என்ற சிறப்பு மொழிக்கிலக்காக முடியும். இக்கால மக்கள் சிலர் மனிதன் என்ற லேபிலைத் தாங்கி மிருகத் திலும் கேவலமாகவே நடந்து வருகிறார்கள். இன்றைய மக்கள் எந்த நல்ல காரியத்திலுங்கூட தீயதைப்புகுத்தி, நல்லது என்ற பெயரால் தீயதைச் செய்பவர்களே மலிந்து காணக்கிடக்கிறது, காரணம் முந் தைய அறநூல்களை கவனத்திற்கெடுத்துக் கொள்வதுமில்லை; அவ்வாறு நாம் முந்தைய அறநூல்களை கண்ணுற்ற போதிலும் அதன்படி நடந்து கொள்ள முற்படவுமில்லை.

மனிதன் செய்யத் தகாதவைகளாயிருப்பதெல்லாம் பொய்—களவு—சூது—கொலை—விபச்சாரம்—இவைகள் தான்.

இக்காலை மக்களில் பொய் சொல்லாதவர்கள் என்று நோக்கு மிடத்து நூற்றிலொன்றுகூட காண்பதறிது. அடுத்தபடியாக களவு இன்று நாட்டிலே வியாபார சூரர்களென்று உயர் மொழிக்கொப்பான வர்களும், ஏனையவர்களும் பணமொன்றை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு செய்து வருகிறார்கள்; அடுத்தது சூது—இது பந்தயம் சீட் டாட்டம் போன்றவைகளை குறிப்பதோடு மட்டுமல்லாமல்—பிறரு டைய பணத்தை ஏமாற்றி கவர்தலுங்கூட சேர்ந்ததுதான். சூது செய்யாதவர்களும் மிகப்பலர் இருக்க முடியாது; கொலை:—இதுவும் இது காலை மிகுந்து நடைபெறுகிறது. தினத்தாள் பத்திரிகைகளைப் புரட்டினால் கொலை சம்பவம் பற்றி காணாதிருக்க முடியாது.

ஆகவே மனிதன் என்பவர்களில் பெரும்பாலோர் மாபாதங்களனைத்தும் இடைவிடாது செய்பவர்களாகவே இருக்கிறார்கள்.

மிருகங்கள் பொய்—களவு—சூது இவைகளில் அறவே ஈடுபடுவதில்லை. கொலையும், காமமும் ஓரளவு செய்கின்றன. ஆகவே அவைகள் இரண்டு குற்றங்களும், மனிதன் ஐந்து குற்றங்களும் செய்கிறான்; எனவே மனிதனை சிறந்தவனென்று கூறுவதற்கு அவனிடம் அதற்குரிய அம்சங்கள் காணப்படவில்லை. ஓரறிவுகூடப் பெற்றுள்ள மனிதன் (ஓறிவு குறைவாகவுள்ள) மிருகத்திலும் கேவலமாகவே இருக்கின்றனர் மிகப்பலர். இதைத்தான் உலகப் பொதுமறை திருகுர்ஆன் இயம்புகிறது இவ்வாறு:—பகுத்தறிவை பயன்படுத்திக் கொள்ளாதவன் மிருகத்திலும் கேடுகெட்டவன் (குர் 7: 179)

வெளிவந்து விட்டது! புதிய பதிப்பு!

இரத்தின விலாசம்
நஸீஹத்துலாசம்.

அல்லாஹ், றஸூலைக் கொண்டு ஈமான் கொண்ட ஒவ்வொரு முஸ்லிமும் படிந்தறிந்து அமல் செய்யவேண்டிய அருமையான நூல் இது. பிரபல இஸ்லாமிய அரபு கிரந்தங்களாகிய கஜானத்துல் அஸ்ரார், ஷிர்ஹத்துல் இஸ்லாம், ரத்துல் முக்தார், துர்ரத்துன் நாஸிஹின் முதலிய கிதாபுகளிலிருந்து திரட்டி யெடுத்தெழுதப்பட்ட அருமையான நஸீஹத்துகளும், மஸ்அலாக்களும், ஹதீதுகளும் ஹிக்காயத்துகளும் நிறைந்த நூல் இது. ஒவ்வொருத்தருடைய கையிலும் இருந்து தீரவேண்டிய கிதாபு. தமிழ் முஸ்லிம்களுக்கு இன்றியமையாத நூல். இதன் அருமை நேரில் பார்த்தால் தெரியவரும். சுத்தத் தமிழ் விலை ரூ. 1—8—0

கிடைக்குமிடம்,—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

Edited by M. S. Abdul Khudus.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

12026

முரீது உபதேசம்.

இதில் அடங்கியுள்ள விஷயங்களாவன:—உண்மை பகீர்கள் யார்? இராதத்—முரீத்—முருதத் விபரம், முரீத் என்பவர் யார்? தஸவ்வுப் விபரம், முரீதின் ஆரம்ப நிலை, ஷேக் சன்னிதானத்தில் முரீதின் மரியாதை, முரீதுக்கு ஷைக் ஆதரவு, சமா என்னும் புகழ் பாடக்கச்சேரி விபரம், முரீதுக்கு பீர்ஸாஹிப்பிடம் இருக்கவேண்டிய பயபக்தி, முரீதுக்கு ஷைக் ஸாஹிபின் உபதேசப்பயிற்சி விதம், சகோதரவாஞ்சையும் ஏனைய பழக்க உபசாரங்களும், அந்நியர் சேர்க்கை, செல்வந்தர் சேர்க்கை, பகீர்களுடன் சேர்க்கை வைத்தல், பகீர் ஸாஹிபின் எளிமைச்சிறப்பு, பகீரும் சுவால் செய்தலும், பகீர் சுகானுபவ ஒழுக்கம், பகீர் சாப்பாட்டு ஒழுக்கங்கள், தோழருடன் உபசாரமுறை, பிள்ளை குட்டிகளுடன் பகீரின் பழக்காசாரமுறை, பிரயாணத்தில் பகீர்கள் எவ்வாறு ஒழுக வேண்டும், பகீர் ஸாஹிபு இராகம் செவியுறுதல், முஜாஹிதா (தவப்பரயுத்தம்) விபரம், முஜாஹிதாவின் தாத்பரியம், முஜாஹிதாவை பூர்த்திக்கும் அம்சங்கள், ஆண்டவன் மஃரிபத், ஷைதானைப் பற்றிய எச்சரிக்கை, நப்ஸ் எச்சரிக்கை, ஆண்டவன் பயபக்தி, மஹான்களின் பழக்க ஆசாரங்கள், தவக்கல் என்னும் நம்பிக்கை நற்குண சிலங்கள், ஆண்டவன் சந்நிதானத்தில் நன்னடத்தை, ஷுக்ரு (நன்றி) விபரம், ஸப்று விளக்கம், ரிஜா (சம்மதம்) உண்மை விளக்கம், பரிசுத்தம், தெளபாச் செய்தல். இராக்கால வணக்கம், நபி பெருமானாரின் இராத் தொழுகை, தனிமையில் உபதேசித்தல், உபதேச ஷாத்துகள், நப்ஸும் ஆத்துமாவும், தங்கள் ரியாஜத், குத்பு நாயகத்தின் துவா, மதக்கல்வி முதலியவைகளை விரிவாய் விபரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இப்புத்தகத்தை வாங்கி படித்து பிரயோஜனமடைவது அத்தியாவசியம்.

இதன் விலை ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :—

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்

ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ்.

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

இனம்! இனம்!!

ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1954

இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காதுஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிடமிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு, புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷி காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

ஹாஜி M. A. ஷாஹுல் ஹமீது & ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.